லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-8 இதழ்-6 நவம்பர் - 2019 மாதஇதழ் விலை ₹ 10

makkalvisaranai



# உள்ளாட்சித் தேர்தலிலும் வெற்றி தொடருமா?





# வள்ளலார் அருளிய
# கல்ப மருந்து

**பத்தியமில்லா மருந்து**

## குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்



போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் **K. இராஜமாணிக்கம்**

**அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்**

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

**செல் : 99417 64922, 94441 80984**

# தலையங்கம்

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

## மக்களுக்காக பணியாற்றுங்கள்

மகாராஷ்டிரம், ஹரியாணா மாநில சட்டமன்றத் தேர்தல்களின் முடிவுகளும், நாடெங்கும் நடந்த சட்டமன்ற, நாடாளுமன்ற இடைத்தேர்தல் முடிவுகளும் வெளியாகியுள்ளன. மகாராஷ்டிரத்தில் பாஜக, சிவசேனை கூட்டணியானது, ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்திருக்கிறது. மொத்தமுள்ள 288 தொகுதிகளில், 161 தொகுதிகளை பாஜக கூட்டணியும் 98 தொகுதிகளை காங்கிரஸ்-தேசியவாதக் கூட்டணியும் வென்றிருக்கின்றன. ஹரியாணாவில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் 40 தொகுதிகளில் வென்று, வெளியிலிருந்து 6 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கிறது பாஜக. காங்கிரஸ் 31 தொகுதிகளை வென்றிருக்கிறது. ஜன்நாயக் ஜன்தா 10 தொகுதிகளையும் வென்றிருக்கிறது.

வழக்கமாக ஆளும் கட்சிக்கு எதிராக எழும் அலையைத் தாண்டி, இரண்டு மாநிலங்களிலும் பாஜக வெற்றிபெற்றிருக்கிறது. அதேநேரத்தில், அவர்களின் முழக்கங்கள், பேச்சுகள் ஏற்படுத்திய தோற்றத்துக்கு ஈடுகொடுக்கும் வெற்றி அல்ல இது. எதிர்க்கட்சிகள் இந்த வெற்றியைக் கொண்டாடுவதற்கு ஏதும் இல்லை. ஏனென்றால், முறையாகத் திட்டமிட்டுக் கடினமாக உழைத்திருந்தால் அவை வென்றிருக்க வேண்டிய தேர்தல்கள் இவை.

அவநம்பிக்கையோடும், தலைமை பலம் ஏதுமற்ற நிலையில், மந்தமான தேர்தல் பிரச்சாரத்தினூடாகவுமே பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் இத்தேர்தலை எதிர்கொண்டது. அதைத் தாண்டியும் அதற்குக் கணிசமான இடங்களைத் தந்திருக்கிறார்கள் மக்கள். அதேபோல, மகாராஷ்டிரத்தில் தேசியவாத காங்கிரஸுக்கும், ஹரியாணாவில் ஜன்நாயக் ஜன்தா கட்சிக்கும் கணிசமான இடங்களை மக்கள் தந்திருப்பது பிராந்தியக் கட்சிகளின் இடத்தை இந்தியாவில் எவரும் அழித்துவிடலாகாது என்பதையே சொல்கிறது. நாடெங்கும் 51 சட்டமன்றத் தொகுதிகளிலும், இரண்டு மக்களவைத் தொகுதிகளிலும் நடந்த தேர்தல்களுக்கான முடிவுகளும் வெளியாகியுள்ளன. சட்டமன்றத் தொகுதிகளில் 26 இடங்களில் பாஜக கூட்டணி வென்றிருக்கிறது. ஏனைய 25 தொகுதிகளை எதிர்க்கட்சிகள் வென்றிருக்கின்றன. அதுபோலவே இரு மக்களவைத் தொகுதிகளையும் எதிர்க்கட்சிகள் வென்றிருக்கின்றன. பொருளாதார மந்தநிலை இந்த அரசாலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தபோதிலும், அதைத் தாண்டியும் பாஜகவால் வெல்ல முடிகிறது.

அதேசமயம், அது வெல்ல முடியாத சக்தி அல்ல எனும் இரு செய்திகளையும் இது வெளிப்படுத்துவதாகவே தோன்றுகிறது. தேசியவாத ஆயுதத்தை மட்டும் கையில் ஏந்தி, பிரதமர் மோடியின் கவர்ச்சியை மட்டுமே நம்பி பாஜக தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதாகவும், அதேபோல மோடி எதிர்ப்பு அரசியலை மட்டுமே பேசி எதிர்க்கட்சிகள் பயணிக்க முடியாது. மாற்றுக் கதையாடல் தேவை என்பதாகவும் புரிந்துகொள்ளப்பட வேண்டியவை இவை.

தமிழ்நாட்டில் இரண்டு தொகுதிகளிலும் ஆளுங்கட்சியான அதிமுக வென்றுள்ளது. ஆளுங்கட்சி மீது மக்களுக்கு அதிருப்தி நிலவினாலும் அதை அறுவடை செய்துகொள்ளும் வகையில், எதிர்க்கட்சியான திமுகவாலும், அதன் கூட்டணிக் கட்சியான காங்கிரஸாலும் செயல்பட முடியவில்லை. தோல்வியிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள முனையும் அதிமுகவையும் மக்கள் கவனிக்கிறார்கள். வெற்றி கிடைத்துவிட்ட துணிச்சலில், மீண்டும் குடும்ப அரசியலில் குதூகலமாகக் குளிக்க இறங்கும் திமுகவையும் மக்கள் கவனிக்கிறார்கள் என்பதாகவே இதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. மொத்தத்தில், ஆளுங்கட்சிகளிடமும் எதிர்க்கட்சிகளிடமும் மக்கள் எதிர்பார்ப்பது ஒன்றுதான், மக்களுக்காகப் பணியாற்றுங்கள்; புதிய சிந்தனைகளுடன் செயலாற்றுங்கள் என்பதே அதுவாகும்.

**- ஆசிரியர்**

# பணக்காரர்கள் ஏன் சம்பாதிப்பதை நிறுத்துவதே இல்லை?

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பெர்னி சாண்டர்ஸ், "பெருங்கோடீஸ்வரர்கள் (பில்லியனர்) இருக்கவே கூடாது" என்று கடந்த மாதம் கூறினார். அமெரிக்காவில் காணப்படும் ஏழை-பணக்காரர் வேறுபாடு என்பது, "தார்மீகரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பேரவலம்" என்று அதிபர் தேர்தலுக்கான ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் விவாதத்தின் போது அவர் கூறினார். "யாருமே பெருங் கோடீஸ்வரர் களைப் பாதுகாக்க விரும்பவில்லை. பெருங்கோடீஸ்வரர்கள்கூடப் பெருங்கோடீஸ்வரர்களைப் பாதுகாக்க விரும்புவதில்லை" என்றார், இன்னொரு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஆமி க்ளோபுசார்.



இந்தச் சிந்தனை பொதுவாக உலவிக் கொண்டிருக்கும் ஒன்றுதான். இந்திய மதிப்பில் 4.9 லட்சம் கோடி சொத்துக்கு அதிபதியான மார்க் சக்கர்பெர்க் இந்த விஷயத்தைப் பற்றி வெளிப்படையாக விவாதிக்கத் தயாராக இருக்கிறார். "ஒரு மனிதர் எவ்வளவு பணத்தைக் கொண்டிருக்கலாம் என்பதற்கான துல்லியமான எல்லைக்கோடு என்னிடம் இருக்கிறதா என்று தெரியவில்லை" என்று தன் நிறுவன ஊழியர்களுடனான நேர்காணலில் தெரிவித்தார். "ஆனால், ஒருகட்டத்தில் அவ்வளவு பணத்தை வைத்திருக்கும் தகுதி யாருக்குமே இல்லை" என்கிறார். எனினும், செல்வச் செழிப்பில் திளைத் திருப்பவர் களுக்கு அளவற்ற செல்வம் திகட்டவேயில்லை. அது ஏன் என்று கோடீஸ்வரர் அல்லாத, சாதாரண மக்கள் வியக்கிறார்கள். சமூகத்தில் கோடீஸ்வரர்களுக்கு அடுத்த படிநிலையில் உள்ளவர்களில் வயதானவர்களைப் போல் இல்லாமல், பணக்காரர்கள் அதிக நேரம் உழைக் கிறார்கள், சமூக உறவுகளுக்குக் குறைந்த நேரமே செலவிடுகிறார்கள். ஆப்பிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும், பல கோடி டாலர்களுக்குச் சொந்தக்காரருமான டிம் குக் தான் காலை 3.45 மணிக்கு எழுந்திருப்பதாகக் கூறுகிறார். போட்டி நிறுவனங்கள் மீதான தாக்குதலைத் தொடுப்பதற்கு இப்படி சீக்கிரம் எழுந்திருக்க வேண்டியிருக்கிறது என்கிறார்.

டெஸ்லா, ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனங்களின் உரிமையாளரும் ரூ.1.6 லட்சம் கோடி சொத்து வைத்திருப்பவருமான இலான் மஸ்க் வாரத்துக்கு 120 மணி நேரம் உழைக்கிறார். இதை, 80 அல்லது 90 மணி நேரமாகக் குறைத்தால் தனக்கு வெற்றியே என்கிறார். பணக்காரர்கள் தொடும் அனைத்தும் பணமாகின்றன. ஆனால், தற்போது கொழுந்துவிட்டெரியும் பணத்தீக்கும் பொருளாதாரப் படிநிலையில் கீழே உள்ள 50%-க்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அவர்கள் 2003-ல் கொண்டிருந்ததைவிட 32% குறைவாகவே சொத்து மதிப்பைக் கொண்டிருக்கிறார்கள். உச்சியில் உள்ள ஒரு சதவீதத்தினர் கடந்த தசாப்தத்தில் 85% சொத்துகளைப் பத்திரங்கள், பங்குகள் போன்றவற்றில் முதலீடுசெய்து அவை பெரிய அளவில் பல்கிப் பெருகக் கண்டிருக்கின்றனர்.

அந்தோணியோ கார்ஸியா மார்ட்டினெஸ் தனது புதிய நிறுவனத்தை ட்விட்டரிடம் விற்றார். ஃபேஸ்புக்கில் உற்பத்திப்பொருள் மேலாளராக இருந்தவர் அவர். "புதிய பொழுதுபோக்கை நீங்கள் ஏன் உருவாக்கிக் கொள்வதில்லை, அறப்பணிகள் செய்யலாமே என்று பணக்காரர்களிடம் மக்கள் கேட்கிறார்கள். எனினும், பெரும்பாலானவர்களால் அது முடிவதில்லை. அவர்கள் முதலாளித்துவத்திலிருந்து அப்பாற்பட்ட அர்த்தத்தைப் பெறுகிறார்கள். பணம் இல்லையென்றால் அவர்களால் என்ன செய்ய முடியும்" என்கிறார் மார்ட்டினெஸ்.

வாழ்க்கை முறையைச் சரிப்படுத்துதல் தொடர்பான புத்தகங்களை எழுதுபவர் டிம் ஃபெர்ரிஸ். அவர் சிலிக்கான் பள்ளத்தாக்கில் நாயக முதலீட்டாளராக ஒரு தசாப்தம் இருந்தவர்.

அதிபணக்காரர்களைப் பற்றி இவர் கூறும்போது "அவர்கள்தங்கள்வாழ்க்கையையும்வேலையையும் ஆறாவதுகியரில்செலுத்திக்கொண்டிருப்பவர்கள்" என்கிறார். தொடர்ச்சியான வேலை இல்லையென்றால், இருத்தல் என்ற இயற்கையை நாம் எதிர்கொண்டாக வேண்டுமல்லவா? "வேலை செய்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தை அவர்கள் கடந்த பின் அவர்கள் பொருளாதார நிலையைத் தாண்டியவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

அந்நிலையில், குறைந்த கியர்களுக்கு மாறுவது அவர்களுக்குச் சிரமம்" என்கிறார் ஃபெர்ரிஸ். "இடைவெளியை நிரப்புவதற்கு வேட்கை மிகுந்த திட்டங்கள் இல்லையென்றால், அங்கே பெரும்பாலும் வெறுமை தோன்றி, நம்மால் தவிர்க்க முடியாத கேள்விகளைக் கொண்டு வந்துவிடும்" என்கிறார் அவர். ஒருவகையில் இது கடந்த இரண்டரை நூற்றாண்டுகளாக அமெரிக்காவில் போய்க் கொண்டிருக்கிறது. "அரசர்களையும் சோம்பேறிப் பணக்காரர்களையும் தூக்கியெறிந்து நாம் உருவாக்கிய நாடு அமெரிக்கா. இந்த மாபெரும் செயல்பாடு அமெரிக்கர் என்றால், என்ன என்பது குறித்துப் பொதுமக்கள் கொண்டிருக்கும் கருத்துகளில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது" என்கிறார் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியரான மார்கரெட் ஓ'மாரா.

ஹார்வார்டு பல்கலைக்கழகம் சமீபத்தில் நான்காயிரம் கோடீஸ்வரர்களிடம் ஒரு ஆய்வை நடத்தியது. இவர்களில் 10 லட்சம் டாலர் சொத்து கொண்டவர்களைவிட 80 லட்சம் டாலர் சொத்து கொண்டவர்கள் மகிழ்ச்சியாக இல்லை என்று ஹார்வார்டு கண்டறிந்திருக்கிறது. 2006-ல் நடத்தப்பட்ட பிரபல ஆய்வொன்றில், பணக்காரர்கள் தங்கள் முழு மனதோடு அல்லாமல் கட்டாயத்தின் பேரிலேயே பல விஷயங்களையும் செய்வதில் அதிக நேரம் செலவிடுகின்றனர் என்பது தெரியவந்தது. ஏன் இதைத் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்கிறார்கள்? முன்பு எப்போதையும்விட அதிக செல்வம் கொண்ட செல்வந்தர்கள் அளவுக்கு அதிகமாக இருப்பது இதற்கான காரணங்களுள் ஒன்றாக இருக்கலாம்.

"நிறைய பேருக்குப் போதும் போதும் என்று ஆகிவிடும். ஆனால், இன்னும் சில வகை மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவுதான் வைத்திருந்தாலும் இன்னும் போய்க்கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள்.





அவர்களை நான் 'புள்ளிக்காரர்கள்' என்று அழைப்பேன். அதாவது, புள்ளிகளை அதிகரித்துக்கொண்டே போக வேண்டும் என்பவர்கள். போட்டியால் மட்டுமே முற்றிலும் இயங்குபவர்கள் அவர்கள்" என்கிறார் சிஎன்பிசி தொலைக்காட்சியைச் சேர்ந்தவரும் நூலாசிரியருமான ராபர்ட் ஃப்ராங்க்.

"ஆரக்கிள் இணை நிறுவனரும் பெருங்கோடீஸ் வரருமான லாரி எலிஸனை எடுத்துக் கொள்ளுங்கள். அவருக்கு மைக்ரோசாஃப்ட்டின் பில் கேட்ஸ், பால் ஆலன் ஆகியோரைக் கண்டால் பொறாமையாக இருக்கும். ஆகவே, பால் ஆலன் தனது 400 அடி படகை உருவாக்கும்போது அந்த வேலை முடியும் வரை லாரி எலிஸன் காத்திருப்பார். பிறகு, 450 அடியில் ஒரு படகை உருவாக்குவார். தான் முதல் ஆளாக வரும்வரை அவரால் மகிழ்ச்சியாக இருக்கவே முடியாது" என்கிறார் ஃப்ராங்க். "குமிழிகளுக்கு உள்ளே வாழ்வதற்குப் பணக்காரர்களுக்குத் தங்கள் உயரத்துக்கேற்ப அதீதங்கள் தேவைப்படுகின்றன" என்கிறார் மனநல நிபுணர் ஸ்டீவன் பெர்கிளாஸ்.

"நீங்கள் மதுவுக்கு அடிமையானவர் என்றால் ஒரு கோப்பை, இரண்டு கோப்பை, ஐந்து கோப்பை, ஆறு கோப்பை தேவைப்படும் போதையை உணர்வதற்கு. ஆனால், உங்களுக்கு 10 லட்சம் டாலர்கள் கிடைக்கின்றன என்றால், உங்களை ஒரு அரசர் போன்று நீங்கள் உணர ஒரு கோடி டாலர்கள் தேவைப்படும். பணம் என்பது ஒரு போதை வஸ்து" என்கிறார் அவர். எல்லையற்ற வாய்ப்பு, அதீதத் தனிமை. இந்தப் பணக்காரர்களுக்கு ஏற்கெனவே நிகழ்காலம் சொந்தமாக இருக்கிறது. வாங்குவதற்கு வேறென்ன இருக்கிறது, நாளை என்ற ஒன்றைத் தவிர; அதற்குப் பிறகு நாளை மறுநாள் என்ற ஒன்று தவிர?

**– குருதேவ்**

# அழியும் நிலையில் நடுத்தர தொழில் நிறுவனங்கள்

## ஒரு பார்வை

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழில் துறையில் முக்கிய பங்காற்றி வருகின்றன. நாட்டின் மொத்த உற்பத்தியில் 30 சதவீத உற்பத்தி இத்தொழில் நிறுவனங்கள் மூலம் நடக்கிறது. இந்திய ஏற்றுமதி தொழிலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் மூலம் 40 சதவீத ஏற்றுமதி வணிகம் நடைபெறுகிறது. சுமார் 6 ஆயிரம் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்திய அளவில் சுமார் 633.92 லட்சம் தொழில் நிறுவனங்கள் தொழில் துறையின் வளர்ச்சிக்கு பாங்காற்றி வருகின்றன.

தமிழகத்தில் சுமார் ரூ. 2, 23, 783.75 கோடி முதலீட்டில் சுமார் 20.13 லட்சம் பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழில் செய்து வருகின்றன. இதன்மூலம் 128.91 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இத்தொழில்களின் வளர்ச்சிக்காக தமிழக அரசால் 2,023 தொலைநோக்கு திட்டம் அறிவிக்கப்பட்டன.

இத்தொழில் நிறுவனங்கள் புதிதாக தொடங்குவதற்கு பல துறைகளின் அனுமதியைப் பெறுவதற்காக ஒற்றை சாளர திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல துறைகளின் அனுமதியைப் பெறுவதற்கு www.easybusiness.tn.gov.in/msme என்ற இணையதளத்தில் தேவையான தகவல்களுடன் பதிவு செய்தால் ஏளிதாக அனுமதி பெறலாம்.



இத்தொழில்களின் மேம்பாட்டுக்கு உதவிடும் வகையில் தமிழக அரசு தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் விதிகள்-2018 என்ற சட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறது. இதன்மூலம் தொழில் தொடங்குவதற்கு நடைமுறைகள், உரிமங்கள், அனுமதிகள் வழங்குவது எளிதாக்கப்பட்டுள்ளன.



இத்துறையில் புதிதாக தொழில் தொடங்குவதற்கு வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை உருவாக்கும் திட்டம் (www.msmeonline.tn.gov.in/uyegp), புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் ஆகிய தமிழக அரசின் திட்டங்கள் மூலம் வங்கிகளில் கடனுதவி வழங்கும் நடைமுறை செயல்பாட்டில் உள்ளது.

புதிதாக தொடங்கப்பட்ட தொழில்களுக்கு அரசின் மானிய உதவிகளை பெறுவதற்காகவும் பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம், பின் முனை வட்டி மானியம், ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்தும் திட்ட மானியங்கள் பெறுவதற்கு https:// msmeonline.tn.gov.in/incenti ves/



index.php என்ற இணையதளத்தில் பதிவு செய்து பயனடையலாம். பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கு வங்கிக் கடனுதவி, அரசின் மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய www.kviconline.gov.in என்ற இணையதள முகவரி மூலம் பதிவு செய்ய வேண்டும்.

மேலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு சந்தை வாய்ப்பு உதவி, நலிவுற்ற நிறுவனங்களைப் புனரமைக்கவும் உதவி, விநியோகம் செய்யப்பட்ட பொருள்களுக்கான தொகையை வழங்காத நிறுவனங்களிடம் இருந்து தொகையைப் பெற்று குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக தொழில் நிறுவன வளர்ச்சி ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகிறது.

திறன் மிகுந்த தொழிலாளர்களை உருவாக்குவதற்காக அம்மா திறன் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழுமத் தொழில் திட்டங்கள் மூலம் கூட்டாக தொழில் தொடங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேலூர் மாவட்ட குறு, சிறு தொழில் முனைவோர் சங்கத் தலைவர் எம்.வி.சுவாமிநாதன் கூறியது:

முந்தைய காலங்களில் வேலையில்லா இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்காக மாவட்டத் தொழில் மையத்தை நோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் காலதாமதமும் ஏற்பட்டது. ஆனால் தற்போது அனைத்து நடைமுறைகளும் இணையவழியாக மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து சேவைகளும் நம்முடைய கை அருகே வந்துள்ளது. இதனால் தொழில்முனைவோருக்கு காலதாமதம் ஏற்படுவது தடுக்கப்படுகிறது. அவர்கள் எளிதாக தொழில் தொடங்கி அமைதியான முறையில் தொழில் நடத்துவதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது என்றார்.

**- அகிலாண்டேஸ்வரி**

# என்ஐஏ தீவிரவாதத்தை ஒடுக்குகிறதா?

சிபிஐயில் இருந்து தான் தேசிய புலனாய்வு முகமை எனப்படும் என்ஐஏ என்கிற தனி அமைப்பு உருவாக்கப்பட்டது. சிபிஐ கவனித்து வந்த பணிகளை இந்த அமைப்பிடம் காலத்தின் சூழ்நிலை கருதி அளிக்கப்பட்டது. இருப்பினும், என்ஐஏ என்கிற அமைப்புக்கும், சிபிஐ என்கிற அமைப்புக்கும் ஒரே ஒரு வேறுபாடு உள்ளது. அந்த வேறுபாடு என்னவென்றால், சிபிஐ அமைப்பு மாநில அரசின் அனுமதி கேட்க வேண்டும். அவர்கள் என்ன காரணத்திற்காக விசாரணை செய்ய மாநிலத்துக்கு வருகின்றனர்; யாரிடம் விசாரிக்க வேண்டும் என்பதை முழுமையாக சொல்ல வேண்டும். அப்போது, தான் அந்த அமைப்பால் ஒரு மாநிலத்திற்குள் சென்று சோதனையோ அல்லது விசாரணையோ செய்ய முடியும். மாநில அரசின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் சிபிஐ எதுவும் செய்ய முடியாது. மாநில அரசு அனுமதி தராமல் இருக்க அதற்கு அதிகாரம் உண்டு. மாநில போலீசார் விசாரிக்கிறது; அதுவே போதுமானது என்று நம்புவதாக கூறிவிட்டால் சிபிஐ அங்கு நுழைய முடியாது.

ஆனால், என்ஐஏவுக்கு அது போன்று அனுமதி கேட்க வேண்டிய தேவையில்லை. மாநில போலீசார் உதவி தேவையே தவிர, மாநில அரசின் அனுமதி தேவையில்லை. சம்பந்தப்பட்ட மாநிலத்துக்குள் நுழைந்து, குறிப்பிட்ட பகுதிகளில் கண்காணிக்க வேண்டும் என்றோ, விசாரிக்க வேண்டும் என்றோ விரும்பினால், அதற்கு அவர்களுக்கு மாநில போலீசார் உதவ வேண்டும்.

அவர்கள் எந்த அனுமதியும் கேட்காமல் எந்த மாநிலத்திற்கு வேண்டுமானாலும் சென்று சோதனை செய்யலாம். அதே நேரத்தில் அவர்கள் எந்த மாநிலத்தில் குறிப்பிட்ட ஒரு நபர் வசித்து வந்தாலும், அவரை விசாரிக்க போகலாம். தீவிரவாத சந்தேகத்தின் பேரில் சிலரை விசாரிக்க வேண்டும்; ஆதாரங்கள் இருப்பின் கைது செய்ய வேண்டும் என்றால், அதற்கு என்ஐஏ அதிகாரிகள் குழு உரிய திட்டமிடல் செய்தபின், சம்பந்தப்பட்ட மாநிலத்துக்கு செல்லதயாராகி விடுவர். அவர்கள் விசாரணை வளையத்துக்குள் வைக்க வேண்டிய குறிப்பிட்ட நபர்களை அடையாளம் காண வேண்டும்; அவர்கள் சந்தேகத்துக்கிடமான





நபர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களை கைது செய்து அவர்களிடம் விசாரணை நடத்த முடியும். இதற்காக என்ஐஏ அமைப்பு மாநில அனுமதிக்காக காத்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. மாநிலத்தில் சென்று சோதனை செய்து விசாரணை நடத்தியபின், சம்பந்தப்பட்ட நபர் அல்லது நபர்களை கைது செய்து தங்கள் தலைமையிடத்துக்கு அழைத்து செல்ல முடியும்.

அதே போன்று ஏஎன்ஐஏ அமைப்பை மாநில அரசுகள் அழைத்தாலும் அங்கு குழுவினர் சென்று விசாரணையோ அல்லது சோதனையோ நடத்தலாம். மாநில போலீசார் முழு அளவில் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். சிபிஐ போன்று இல்லாமல் என்ஐஏ என்கிற அமைப்புக்கு எல்லையில்லா அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள், மக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்ற நோக்கை கருத்தில் கொண்டு இந்த தேசிய புலனாய்வு முகமை செயல்படுகிறது. தேசிய நலனை கருத்தில் கொண்டு செயல்படும் இந்த என்ஐஏ எப்போதும், எந்த நேரத்திலும் எங்கு வேண்டுமானாலும் சோதனை செய்யும் அதிகாரத்தை தன் வசம் வைத்துள்ளது. அதனால் தான், தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் மற்றும் அவரது ஆதரவாளர்களின் செயல்பாடுகளை என்ஐஏ தீவிரமாக கண்காணித்து கட்டுப்படுத்தி வைத்துள்ளது. இந்த அமைப்பு எப்போது விழிப்புடன் இருந்து நாட்டில் எந்தவித அசம்பாவித சம்பவங்கள் நிகழாத வண்ணம் பார்த்து கொள்கிறது. இதன் மூலம் நாட்டு மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

- M. சரவணன்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

**மக்கள் விசாரணை**®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-8 இதழ்-6 நவம்பர் - 2019

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
**V.அருணாச்சலம், A.C.குமார், S.அனந்த கிருஷ்ணன்**, MA,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
N.சிலம்பரசு தர்மபுரி, A.பாலகிருஷ்ணன் கோவை
நாகராஜ் மூணாறு, R.ஜெயா தென்சென்னை
சுசி ஈஸ்வர் விருதுநகர், குருபாலகிருஷ்ணன்
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம்
K.L.ராஜேந்திரன், P.ஏழுமலை, M.நிவேதிதா
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, நீலகண்டன், S.மோகன்
N.சீனிவாசன், G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், **M.சரவணன்** தி.மலை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M.அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**

நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321



முனைவர் ஆ.மவுரியன்



தொடர் 24

**வீரத்தமிழச்சிகளின் வரலாறு**

### இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை

# கே.பி.ஜானகி அம்மாள்


**தமிழ்நாட்டின் 'அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின்' முதல் தலைவர்**

இரண்டாம் உலகப்போர் தொடங்கிய 1939-ம் ஆண்டு, செப்டம்பர் 4-ம் தேதி அன்று பசும்பொன் முத்துராமலிங்கத்தின் அழைப்பை ஏற்று மதுரை வந்தார் சுபாஷ் சந்திர போஸ். காந்தி நிறுத்திய வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்டு அப்போது ஜெயித்திருந்த போஸை வரவேற்க காங்கிரஸார் தயக்கம் காட்ட, எந்த அச்சமும் இன்றி அன்றைய மதுரை மாவட்டத் தலைவர் மற்றும் செயலாளராக இருந்த குருசாமி - ஜானகி தம்பதி, முத்துராமலிங்கத்துடன் சேர்ந்து விமான நிலையம் சென்று வரவேற்றனர்.

1940-ம் ஆண்டு மதுரையில் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கிளை தொடங்கப்பட்டபோது, அதில் இணைந்தார் ஜானகி. கம்யூனிஸ்ட் கட்சி அப்போது தடைசெய்யப்பட்டிருந்த காரணத்தால், பொன்மலை சென்று தங்குமாறு ஆங்கிலேய அரசு ஜானகிக்கு உத்தரவிட்டது. அங்கும், யுத்த எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டதால், ஜானகியும் குருசாமியும் கைது செய்யப்பட்டனர். ஆங்கிலேய அரசின் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், போர் எதிர்ப்புக்காகக் கைது செய்யப்பட்ட முதல் தென்னிந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றார் ஜானகி. ஆறு மாதங்கள் வேலூர் சிறையில் கடுங்காவல் தண்டனை. சிறையில் ஆஸ்துமா நோய் தாக்க, எலும்பும் தோலுமாக விடுதலையாகி வந்தார்.

தொடர்ந்து வறுமை வாட்ட, வீடுகள், நகைகள், புடவைகள் என்று அனைத்தையும் விற்கவேண்டிய நிலை. அந்த ஏழ்மையிலும், தினமும் வீட்டுக்கு வரும் மக்களுக்கும், கட்சித் தொண்டர்களுக்கும் உணவளிக்கத் தவறியதில்லை ஜானகி. 1941-ம் ஆண்டு மீண்டும் கைது செய்யப்பட்டார். 1944-ம் ஆண்டு மதுரை ஹார்வி மில்லில் நடைபெற்ற போராட்டத்தை முன்னின்று

நடத்தி மீண்டும் கைதானார். பெண் தொழிலாளிகளையும் விவசாயிகளையும் ஒருங்கிணைக்கத் தொடங்கினார். மதுரை மாவட்டத்தின் சிறு கிராமங்களில் விவசாய சங்கங்கள் உருவாகின. ஜானகி சார்ந்த கட்சியை 'அம்மா கட்சி' என்று கிராம மக்கள் அழைக்கும் அளவுக்கு மக்களிடம் நெருக்கமானார் ஜானகி. **1948**-ம் ஆண்டு மீண்டும் கைது, கம்யூனிஸ்ட் கட்சி மீதான அடக்குமுறை என்று தொடர்ந்தன பிரச்னைகள். **1951**-ல் விடுதலையான ஜானகி, பரிவல்லிக்கோட்டை கிராமத்துக்குச் சென்று விவசாயக் கூலியாக வயலில் இறங்கி பணியாற்றத் தொடங்கினார். கட்சியின் மீதான தடை நீக்கப்பட்ட பின்னரே மதுரை திரும்பினார். **1962**-ல் மீண்டும் சிறை, **1964**-ல் மார்க்சிஸ்ட் கட்சியுடன் இணைப்பு, மீண்டும் கைது என்று சுழன்றடித்தது வாழ்க்கை.



**1967**-ம் ஆண்டு மதுரை கிழக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜானகி. அதிக அளவு பெண்களை அரசியலுக்கும் விவசாயம், நெசவு மற்றும் தொழிற்சங்க இயக்கத்துக்கும் கொண்டுவந்த பெருமை ஜானகியையே சாரும்.

**1970**-ம் ஆண்டு முதல் ராஜம்மாள், மீனா கிருஷ்ணசாமி போன்றோருடன் இணைந்து பல்வேறு மாவட்டங்களில் மாதர் சங்கங்கள் தொடங்க ஆரம்பித்தார் ஜானகி. அவற்றை ஒருங்கிணைக்கும் பணியை பாப்பா உமாநாத்துடன் இணைந்து செய்தார்.

**1974**-ம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் முதல் மாநாட்டில் தமிழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜானகி.

'விடுதலைப் போராட்ட வீரர்' என்று அரசு பாராட்டி அளிக்க முன்வந்த தாமிரப் பட்டயத்தையும், ஓய்வூதியத்தையும் வாங்க மறுத்துவிட்டார் ஜானகி.

கட்சி அலுவலகத்திலேயே தங்கியிருந்த ஜானகியின் மொத்த சொத்து ஒரு கைப்பையும், சிறு குடையும்தான். ஞாபகமறதி மற்றும் ஆஸ்துமாவால் அவதியுற்று வந்த ஜானகி, **1992** மார்ச் **1** அன்று மரணமடைந்தார். கடந்த காலத்தை அவர் திரும்பிப் பார்க்க விரும்பாவிட்டாலும், நாம் பார்க்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

**- தொடரும்**

# வானிலையை கண்டறியும் ஜிபிஎஸ் பலூன்




பருவ காலத்திற்கு ஏற்ப நாம் தெரிந்து கொள்ளும் புயல் மழை போன்ற முன் எச்சரிக்கைகளை, வானிலை ஆய்வு மையம் எவ்வாறு முன்கூட்டியே கண்டறிகிறது? வானிலை ஆராய்ச்சி மையம் காற்று மற்றும் மழை குறித்து சாட்டிலைட் மூலம் முன் கூட்டியே கண்டறிந்து மக்களுக்கு முன் எச்சரிக்கையை தருவதாக நம்பிவருகிறோம். ஆனால் ஒட்டு மொத்த வானிலை முன் எச்சரிக்கை அறிவிப்பிற்கும் தற்போதும் காரணகர்த்தாவாக இருப்பது ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட ரப்பர் பலூன் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? உண்மையில் பலூன்கள் தான் வானிலை மையங்களின் ஒற்றர்கள்.

வானில் மேகங்கள் அதிகமாக காணப்பட்டால் வெள்ளை நிற பலூனும், மேகங்கள் இல்லாமல் இருந்தால் சிவப்பு நிற பலூனும் ஆய்வுக்கு பயன்படுத்தப்படுகின்றது. முதலில் வெள்ளை நிற ரப்பர் பலூனில் ஹைட்ரஜன் வாயு நிரப்பபடுகின்றது. பேட்டரி பொருத்தப்பட்ட நவீன ஜிபிஎஸ் கருவி ஒன்றை மழையில் நனையா வண்ணம் பாதுகாப்பாக பார்சல் செய்து அந்த பலூனுடன் கட்டிதயார் நிலையில் வைக்கின்றனர். உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் இந்த பலூன் பறக்க விடப்படும் என்பதால் அதற்கான நேரம் வந்தவுடன் அலுவலகத்தில் இருந்து கை சைகை மூலமாக சிக்னல் கொடுக்கப்பட்டதும், ஜிபிஎஸ் பலூன் பறக்கவிடப்படுகின்றது


பலூன் செல்லும் வழித்தடத்தை ஜிபிஎஸ் உதவியுடன் கணிணியில் வரைப்படமாக முதலில் அது காட்டுகிறது. உலக நாடுகளும் வானிலை முன் அறிவிப்புகளை இத்தகைய ஜிபிஎஸ் உதவியுடன் கூடிய மிகப்பெரிய பலூன்களை வானத்தில் பறக்கவிட்டு வானிலை மாற்றங்களை முன் கூட்டி அறிந்து மக்களுக்கு தினந்தோறும் தெரிவித்து வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரை சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள வானிலை மையத்திலும் காரைக்கால் பகுதியிலும் இத்தகைய ஜிபிஎஸ்

உதவிடன் கூடிய பலூன்களை காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி நேர இடைவெளியில் உலக நாடுகள் அறிவிக்கும் ஒரே நேரத்தில் பறக்கவிட்டு வானிலை மாற்றங்களை கண்டறிந்து வெளியிடுகிறது.

இதன் உதவியால் புயல் மழை காற்று வெப்பநிலை வளிமண்டல மேலடுக்கில் ஏற்படும் காற்றின் சுழற்சி காற்றின் வேகம் மற்றும் அதனின் திசையையும் இது துல்லியமாக கண்டறிகிறது என்றும் வளிமண்டத்தில் ஏற்படும் காற்றின் அழுத்தம் மற்றும் ஈரப்பதத்தை துல்லியமாக இது கண்டறிந்து சொல்கிறது என்கிறார் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் புவியரசன். இந்தியா முழுவதும் 42 இடங்களில் வானிலை ஆய்வு மையம் இத்தகைய ஜிபிஎஸ் உதவிடன் கூடிய பலுனை வானத்திற்கு ஒரே நேரத்தில் பறக்கவிட்டு வானிலை முன் எச்சரிக்கையை கண்டறிவதாக கூறப்படுகின்றது.



அதே போல விமானங்களின் சேவைக்கும் இது பேருதவியாக இருந்து வருகிறது அதாவது விமானங்கள் எந்த உயரத்தில் செல்ல வேண்டும் அது எங்கு சென்று இறங்க வேண்டும். அதற்கு முன்கூட்டியே கண்டறிய இத்தகைய பலூன் சோதனை மூலம் காற்றின் திசையை கண்டறியலாம். கடலில் ஏற்படும் காற்றின் வேகத்தை அறிந்து மீனவர்களுக்கு முன் கூட்டியே



எச்சரிக்கை விடுவதற்கும் இந்த பலூன் உதவுகின்றது.

ஒரு நாளைக்கு இரண்டு முறை ஜிபிஎஸ் உதவியுடன் கூடிய பலூன் பறக்கவிட்டு வானிலை முன் அறிவிப்புகளை வானிலை ஆய்வு மையம் கண்டறிந்து வருகிறது. இத்தகைய ஜிபிஎஸ் உதவியுடன் கூடிய பலூன் காலை 4 மணியளவில் வானில் செலுத்தப்பட்டு காலை 11 மணியளவில் அதனின் செயல்பாடுகள் கண்டறிந்து வானிலை மாற்றங்கள் அதனின் திசை வரைப்படம் உதவியுடன் வானிலை ஆய்வாளர்கள் கண்டறிந்து இறுதியாக மக்களுக்கு செய்தியாக தெரிவிக்கின்றனர்.

இந்த பலூன்கள் 18 கிலோ மீட்டர் முதல் 36 கிலோ மீட்டர் தொலைவில் பறக்கும் போது வெடித்துவிடும் என்றும் அதன் பின்னர் அந்த ஜிபிஎஸ் கடலிலோ அல்லது சமவெளி பகுதியிலோ சென்று விழும் என்றும் கூறப்படுகின்றது. அப்படி கண்டெடுக்கப்படும் ஜிபிஎஸ் கருவியை உடைக்காமல் பத்திரமாக கொண்டு வந்தால் அவர்களுக்கு 100 ரூபாய் கொடுக்க தயாராக இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**- வீ. சிவசங்கரன்**

# சாகாக் கலை
## எனப்படும்
# காயகல்பம்

### வள்ளலார் அருளிய கல்ப மருந்து

Dr. K. ராஜமாணிக்கம்



"இதற்குத் திபேத்திய லாமாக்கள், புருவ மத்தியில் ஓட்டையிட்டுக் கொள்வதாகவும் இதன் மூலம் வெளியிலிருந்து ஒளி உள்ளே ஊடுருவிச் சென்று மெலடோனின் சுரப்பியைச் சுரக்கச் செய்வதாகவும் நம்புகின்றனர்" என்பதால், சித்தர் செயல்களில் பொதிந்துள்ள அறிவியல் உண்மைகள் விளங்கும். அறிவியல் தொடர்பு இல்லாத காலங்களிலேயே அறிவியலோடு தொடர்புடைய செயல்களைச் செய்து, மரணத்தை வெல்லும் முறைகளைக் கற்றறிந்த சித்தர்கள் அறிவியல் முன்னோடிகள் எனலாம்.

### மந்திரமும் எழுத்தும்

மந்திரம் என்பது மறைமொழிகளால் மனிதர், விலங்கு, பறப்பன, ஊர்வன, தாவரங்கள், நஞ்சுப் பொருள்கள் ஆகியவற்றைத் தமக்குப் பயன்படுமாறு இயக்குவது என்பர். மந்திரம் எண் வடிவமாகவும் எழுத்து வடிவமாகவும் குறிப்பிடப் படுகிறது. மந்திர எழுத்து என்பது ந, ம, சி, வா ய என்னும் ஐந்து எழுத்து. எண் என்பது அந்த எழுத்துகளுக்குரிய எண்களாக 9, 11, 4, 15, 12 எனக் குறிக்கப்படும்.

அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன

காட்டில் உள்ள யானைகளை அடக்குவதற்கு அங்குசம் பயன்படுவது போல், ஐந்து பஞ்சபூதங்களால் உருவான உயிர்கள் அனைத்தையும் அடக்குவதற்கு அங்குசமாக மந்திர எழுத்துகள் பயன்படுகின்றன என்பர். ஒலி வடிவில் அமைந்திருக்கும் மந்திரம் யாவர்க்கும் பொதுவானது. அது எல்லா உயிர்களுக்கும் விரும்பிய பயனைத் தருவது.

ஒவ்வொருவரையும் சூழ்ந்திருக்கும் துன்பங்களை நீக்குவது, தனக்குரிய வலிமையைப் பெற்றுத் தருவது என்று மந்திரத்தின் சிறப்பைத் திருமந்திரம் உரைக்கிறது. மந்திரங்கள் ஒன்றை அல்லது ஒருவரை வயப்படுத்தல், அழித்தல், மழுங்கச் செய்தல், அழைத்தல், தடுத்தல், பகைத்தல், ஏவுதல், மயக்கல், நட்பு கொள்ளச் செய்தல் என்னும் காரணங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. அட்டகர்ம சித்தி, மாந்திரீகச் சித்தி, பராபரத்தின் சித்தி, தச தீட்சை சித்தி, அணிமா, கரிமா, லகிமா, மகிமா, பிறாத்தி, பிறாகாமியம் என்னும் ஆறும் வசியம், ஈசுவரம் ஆகியவையும் சித்தியாகும் என்று கூறப்படுகிறது.

நமசிவாய என்னும் ஐந்தெழுத்தை இருபத்தைந்து கட்டங்களில் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒவ்வொரு எழுத்தாக அமைப்பர். அந்த எழுத்துக்கு மாற்றாக அதற்குரிய எண்களை அமைப்பர். அந்த எண்கள் எந்தப் பக்கத்திலிருந்து கூட்டினாலும் 51 என்னும் கூட்டுத் தொகையாகவரும். மந்திர எழுத்துகளுக்குரிய எண்களைக் குறிப்பிடும் போது, 'க' முதல் 'ன' வரையுள்ள தமிழ் உயிர்மெய் எழுத்துக்களுக்கு 2லிருந்து 19 வரையான எண்களைக் குறித்து மந்திர எழுத்துக்குரிய எண்ணாகக் குறிக்கின்றனர்.

இவ்வாறு எண்ணும் எழுத்தும் கட்டங்களில் இடம்பெறுகின்றன. இந்த மந்திரங்களில் தமிழ் எண்ணும் எழுத்தும் பெறுகின்ற சிறப்பினைக் கருதியே 'எண்ணும் எழுத்தும்

கண்ணெனத்தரும்' என்று உரைக்கப் பட்டுள்ளது. தமிழில் மந்திரங்கள் இல்லை என்னும் கருத்துக்கு மறுப்புரைப்பது போலத் திருமந்திரமும், கருவூரார் மாந்திரிக காவியமும், கொங்கணர் கடைக் காண்டம் போன்ற பல நூல்களும் அமைந்திருக்கக் காணலாம்.

**கும்ப முறை**

தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்களில் பலர் மருத்துவர் களாகவும், அறிவியல் அறிஞர் களாகவும், மெய்ஞ்ஞானி களாகவும் இருந்திருக் கின்றனர். இக்காலத்தில் அறிவியல் வெற்றியாகக் கருதப்பெறும் மரபணு முறையைப் போல, சித்தர்களும் தங்கள் அறிவியல் வெற்றியாகக் கும்ப முறையைக் கூறுவர். கருப்பையிலிருந்து குழந்தை பிறப்பது யோனிமுறை என்பதைப் போல, கும்பம் என்னும் கலசங்கள் மூலம் குழந்தையை உருவாக்குவதைக் கும்பமுறை என்பர். கும்ப முறை மூலம் குழந்தையை உருவாக்கும் முறையே சித்தர்களின் அறிவியல் வெற்றியாகக் கூறப் படுகிறது.

கும்பமுறை என்பது நாதம், விந்து, கந்தகம், ஆண் பாதரசம், பெண் பாதரசம் முதலிய பொருள்கள் அடங்கிய கற்பத்துடன், மேற்கண்ட பொருள்களில் மூன்றை ஒன்றாக்கிய செயநீரால், பாதரசம், கந்தகம், உப்பு ஆகிய மூன்றையும் வெண்ணெய்யாக்கி நீராக்கிய நீர் (இப்பொருள் பெண்ணிடமிருந்து எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அப்பொருளில் நான்கு பொருள்கள் அடங்கும் எனவும், அந்நான்கில் ஒன்று நஞ்சு எனவும், அந்நஞ்சை நீக்கினால் மூன்றே மிஞ்சும் என்றும் கூறப்படுகிறது) ஆகியவற்றைச் சேர்த்துக் கற்பம் உண்டாக்கிக் கும்பம் போன்ற பாத்திரத்தில் மருத்துவ நூல்கள் குறிப்பிடும் அளவின்படி மூட வேண்டும். சீலை மண் கொண்டு மூட வேண்டும். கும்பத்தில் ஊசியால் இரண்டு மூன்று துளைகள் இட வேண்டும்.

இவ்வாறு செய்து வைக்கப்பட்ட கும்பக் கலசம், இருட்டறையில் முறையாக வைக்கப்பட வேண்டும். இந்த கும்பக் கலசத்தில் முன்னூறு நாள்கள் கழிந்த பின் குழந்தை உருவாகும். கும்பக் கலசத்தில் வைக்கப்படும் கற்ப மருந்துகளில் நாதம் விந்து ஆகிய இரு பொருளும் 4, 3 என்னும் விகிதத்தில் கலக்கப் பெற்றால் உருவாகும் குழந்தை ஆண், பெண் என்றாகும். கும்பக் கலச முறையில் உருவாகும் குழந்தை சுமார் 3 அடி உயரம்தான் வளரும். இம்முறையில் உருவானவர்களாக அகத்தியர், முருகன் ஆகியோரைக் குறிப்பிடுவர். இவர்கள் இருவரும் குள்ளமானவர்கள் என்பர். அதனால் அகத்தியரைக் கும்பமுனி, குள்ளமுனி, கலசமுனி என்னும் பெயர்களால் குறிப்பிடுவர்.

கலசத்தில் வைக்கப்படும் பொருள்களில் ஒன்றான கந்தகத்தின் பெயரே கந்தன் என்று முருகனைக் குறிப்பிடுவதாக கூறப்படுகிறது. கற்பம் என்பது நாதம், விந்து ஆகியவற்றால் ஆனது. இந்த நாதமும் விந்தும் தேவ உப்பு, கந்தகம், ஆண் பெண் பாதரசம் என்னும் கொடிய நச்சுப் பொருளால் ஆனது. விஷம் என்னும் நஞ்சு நீக்கப் பெற்ற மேற்கண்ட பொருள்களால் முறைப்படிச் சேர்க்கப்பட்ட பொருள்களுக்கு முப்பு என்றும், கற்பம் என்றும் பெயர். கற்பம் கசப்புத் தன்மை கொண்டது. கொடிய காரமாகவும் மாற்றலாம். இனிப்பாகவும் மாற்றலாம்.

அப்போது, அது, அமிர்தம் எனப் பெயர் பெறும். இக்கற்பம், ஆக்கல், அழித்தல் ஆகிய இரண்டு வல்லமைகளைப் பெற்றிருக்கும். இக்கற்பத்தினால், குழந்தை உருவாக்கப் படுவதுடன் இதனை உண்ணவும் செய்யலாம். இக் கற்பத்தை உண்டவர்கள் பல்லாண்டு காலம் உயிர் வாழலாம்.

இக்கற்ப முறையால் பிறந்த அகத்தியரும் முருகனும் அதையே உண்டு வந்ததால் அவர்களைக் கற்பதேகி என்றும் வழங்கினர். இக்கற்பம், உடம்பினுள் முழுமையான வளர்ச்சி யடைந்த திசுக்களிலுள்ள அணுக்களுக்குப் புதிய ஆக்கத்தைக் கொடுப்பதுடன் மறு வளர்ச்சி நிலையைத் தூண்டும் உயிர்ப் பொருளாகப் பயன்படுகிறது.

இவ்வாறு, உயிரின் மூலங்களைக் கண்டறிந்து அது எந்த எந்தப் பொருளின் சேர்க்கையினால் உருவாகிறது என்பதைக் கொண்டு கற்பங்கள் உருவாக்கி, அதன் மூலம் கும்ப முறையில் குழந்தையை உருவாக்கும் முறையில் சித்தர்கள் வெற்றியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இக்கூற்றினுள் அடங்கிய உண்மைகளை அறிவியல் அறிஞர்கள், ஆய்வு செய்து கண்டறிந்து வெளியிட்டால் அதன் பயன்கள் முழுமையானதாக இருக்கும்.

**- தொடரும்**

# இரு துருவங்களின் சந்திப்பு சரித்திரமாகுமா?

தொழில் வளர்ச்சியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் மிகவும் பின்தங்கியிருந்த இந்தியாவும் சீனாவும் பொருளாதார தாராள மயமாக்கலுக்குப் பிறகு வளர்ச்சியடைந்துள்ளன. உலகின் மொத்த மக்கள்தொகையான 770 கோடியில் இவ்விரு நாடுகளும் 37% மக்களைக் கொண்டிருக்கின்றன. 140 கோடி மக்கள்தொகையுடன் உலகிலேயே முதலிடத்தில் இருக்கும் சீனாவும், 130 கோடியுடன் இரண்டாவது இடத்தில் இருக்கும் இந்தியாவும் எடுக்கும் எந்த முடிவும் உலக நாடுகளால் அண்ணாந்து பார்க்கப்படுகின்றன. பொருளாதாரச் சீர்திருத்தத்தின் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லும் இரு நாடுகளும், இப்போதைக்கு உலக அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையாலும், அமெரிக்க அரசு எடுத்துள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கைகளாலும் வெவ்வேறு நிலைகளில் பாதிக்கப்பட்டுள்ளன.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளிலிருந்து தப்பிக்கப் பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றுவதைக் குறைத்தாக வேண்டிய கட்டாயத்தை இரண்டு நாடுகளும் எதிர்கொண்டுள்ளன. அதிலும் முக்கியமாக, டெல்லி உள்ளிட்ட பெரு நகரங்களில் காற்றுமாசு அதிகரிப்பால் இந்தியாவும், கான்டன் உள்ளிட்ட நகரங்களின் மாசுக்களால் சீனாவும் பெரிதும் பாதிப்படைந்துள்ளன. காற்றாலை மின்னுற்பத்தி, சூரிய ஒளி மின்னுற்பத்தி ஆகியவற்றை விரைவுபடுத்தவும் விரிவுபடுத்தவும் வேண்டிய தேவை இரண்டு நாடுகளுக்கும் இருக்கிறது. இப்படிப் பொதுவான பல அம்சங்கள் இருப்பதால் இரு நாடுகளுக்கு இடையே நட்புறவும் சமாதானமும் நிலவுவது அவசியம். அடுத்த கட்டமாக தொழில், சேவைத் துறைகளில் உடன்பாடுகளைச் செய்துகொண்டால் வளர்ச்சி, வேலைவாய்ப்பு, உற்பத்தியையும் மேம்படுத்திக்கொள்ளலாம்.

இரு நாடுகளுக்கும் இடையில் நேரடியான பிரச்சினைகள் இல்லாவிட்டாலும், வடகிழக்கு எல்லைப் பகுதியில் அருணாசல பிரதேசம் உட்பட பல இடங்களைச் சீனா சொந்தம் கொண்டாடுகிறது. கடந்த ஆண்டு டோக்லாம் என்ற இடத்தில் இரு நாடுகளின் ராணுவ வீரர்களும் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்ட காட்சி உலக அளவில்




விவாதமானது. 73 நாட்களுக்குப் பிறகுதான் அந்தப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு காணப்பட்டது. பாகிஸ்தானைச் சேர்ந்த தேடப்பட்ட பயங்கரவாதி ஹபீஸ் சய்யீது, காஷ்மீர் மாநிலத்தின் தனி அந்தஸ்து ரத்து ஆகியவை தொடர்பாக சீனா எதிர்க் கருத்துகளை வெளியிட்டிருந்தாலும் இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் அது பாதிப்பை ஏற்படுத்திவிடவில்லை.

‘என்எஸ்ஜி’ என்றழைக்கப்படும் அணுசக்தி தயாரிப்புக்கான சாதனங்களையும் இடுபொருட்களையும் பரிமாறிக்கொள்ளும் குழுவில் இந்தியா இடம்பெறுவதையும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையின் நிரந்தர உறுப்பின குழுவில் இந்தியாவை உறுப்பினராகச் சேர்ப்பதையும் சீனா கடுமையாக எதிர்த்து வருகிறது. ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தனது பட்டுப்பாதை பொருளாதாரப் பிராந்தியத் திட்டத்தைத் தொடங்கிய சீனா, இந்தியா அதில் சேராதது குறித்து இன்னமும் அதிருப்தியுடனேயே இருக்கிறது. இப்படி இரு நாடுகளுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் குறையாமலும் மாறாமலும் தொடர்கின்றன.

அதேவேளையில், ஒற்றுமைக்கான துறைகளை

ஆராய்வதிலும் இரு நாடுகளும் அக்கறை செலுத்துகின்றன. சீனாவின் உய்குர் மாகாணத்தில் முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவது, திபெத்தில் அதிருப்தி யாளர்கள் அடக்கப்படுவது, ஹாங்காங்கில் தங்களுடைய உரிமைகளுக்காக மக்கள் போரா டுவது குறித்து இந்தியா வெளிப்படையாகக் கருத்து தெரிவிக்காமல், அவையெல்லாம் சீனாவின் 'உள்விவகாரம்' என்று அமைதி காக்கிறது.

கடந்த அக்டோபர் 1-ல் 'சீன தேசிய தினம்' கொண்டாடப்பட்டது. அப்போது பூம்லா என்ற இந்திய எல்லைக்கு அருகில் இருந்த சீன ராணுவத் தளபதியும் வீரர்களும் முழுச் சீருடையில் இந்தியத் தளபதி பிரிகேடியர் ஜுபின் பட்நாகரையும் வீரர்களையும் கட்டியணைத்து வரவேற்றதுடன் இனிப்புகளையும் சிறப்புப் பலகாரங்களையும் அளித்து வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டனர். சீன ராணுவத்தினர் விரும்பி அருந்தும் 'மவுதாயி', விருந்தில் முக்கிய இடம்பிடித்தது. ஆண்டுதோறும் நான்கு முறை இரு நாட்டு ராணுவத்தினரும் எல்லையில் சந்தித்து இதுபோல வாழ்த்து களைப் பரிமாறிக்கொள்கின்றனர். சீனத் தரப்பில் அக்டோபர் 1 மற்றும் மே 1 (தொழிலாளர் தினம்) இப்படி வாழ்த்தும் வரவேற்பும் நடைபெறுகிறது.



இந்திய வீரர்கள் ஆகஸ்ட் 15, ஜனவரி 26 ஆகிய இரு நாட்களில் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள் கின்றனர். 1990-க்குப் பிறகு, இரு நாடுகளின் ராணுவங்களும் இப்படி 84 முறை சந்தித்துள்ளன என்பதிலிருந்தே சுமுக நிலையைத்தான் இரு தரப்பும் விரும்புகின்றன என்பது புரியும்.

ராணுவ - பொருளாதார வல்லரசாக சீனா இருந்த காலத்தில் இந்தியாவை அச்சுறுத்திய மாதிரி இனியும் அச்சுறுத்த முடியாது என்ற உண்மையை இப்போது புரிந்துகொண்டுள்ளது. இந்த நிலையில்தான் சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மாமல்லபுரத்தில் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். இவ்விரு தலைவர்களுக்கு இடையிலான உச்சி மாநாடு இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றத்தைத் தணித்து நட்புறவுக்கு வலுசேர்க்கக்கூடும். சர்வதேச அரங்கில் வெவ்வேறு பகுதிகளில் நிலவும் சமூக, பொருளாதார, ராணுவ நிலை மாற்றங்கள் இந்தியா, சீனா இரண்டுக்குமே நேரடியாகத் தொடர்பில்லாதவை என்றாலும் கவனிக்கப்பட வேண்டியவை.

இந்தியாவைச் சுற்றியுள்ள இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மர் போன்ற நாடுகளுக்கு சீனா கடன் கொடுத்து, அங்கே ராணுவத் தளங்களை அமைத்தாலும் இந்தியா அஞ்சவில்லை. அதேசமயம், சீனாவுக்கு எதிரான நாடுகளுடனான உறவை வலுப்படுத்தி பதில் நடவடிக்கையை எடுத்துவருகிறது. 2018 ஏப்ரல் 18-ல் ஊஹான் என்ற சீன நகரில் ஜி ஜின்பிங், பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்று உச்சி மாநாடு நடத்தினார். ஊஹான் என்பது சீனாவின் புதிய தொழில் நகரம். அதன் செழிப்பைக் காட்டுவதன் மூலம், தங்களுடைய பொருளாதார வலிமையைக் காட்டினார் ஜி ஜின்பிங். நரேந்திர மோடியோ சீனாவுக்கும் இந்தியாவுக்கும் பண்டைக் காலத்திலிருந்தே வாணிப, கலாச்சார, கல்வித் தொடர்புகள் இருந்ததை உணர்த்தும் விதத்தில் மகாபலிபுரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இந்த மாநாட்டுக்கு விவாதப் பட்டியல் ஏதும் வகுக்கப்படவில்லை. இரு தலைவர்களும் தாங்கள் விரும்பும் தலைப்புகளில் ஆலோசனைகளை நடத்துவார்கள். காஷ்மீரின் அந்தஸ்தைக் குறைத்தது சரியல்ல என்று சீன அரசின் சார்பில் ஆட்சேபம் தெரிவித்திருந்தாலும், இந்த உச்சி மாநாட்டில் அதைப் பற்றி இருவரும் பேச மாட்டார்கள் என்று தெரிகிறது. அடுத்த ஐந்தாண்டுகளில் இந்திய - சீன இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த என்னென்ன செய்யலாம் என்று இருவரும் செயல்திட்டம் வகுக்கவும் வாய்ப்பிருக்கிறது.

**– கனகதுர்கா**

# சிந்தனை முத்துக்கள்


என்னைக்கு சர்வீசுக்கு போன பைக்ல
பெட்ரோல் அப்படியே ரிட்டர்ன் வருதோ..
அன்னைக்கு தான் இந்தியா வல்லரசு
ஆவும்னே..


அரசு ஊழியர்கள் எப்ப போராட்டம்
நடத்தினாலும் அது நியாயமா
இருந்தாலும் மக்கள் ஆதரிக்க
மாட்றாங்களே ஏன் தெரியுமா?
அரசு அலுவலகங்கள்,
மருத்துவமனைகள்,,வங்கிகள் என
எங்கயும் பொது மக்களை அரசு
ஊழியர்கள் மரியாதையா நடத்துறதும்
இல்ல,நாகரீகமா பேசுறதும் இல்ல..
அந்த கோபம் தான்..


சீனர்கள் மற்றும் கொரியர்களை விட
இந்தியர்களின் மூளையின் அளவு
சிறியதாக இருப்பது ஆய்வில்
தெரியவந்துள்ளது.
அதான் பாஜக வை ரெண்டாவது தடவையா
தேர்ந்தெடுக்கும் போதே தெரிலயா..?
இதுக்கு ஆய்வு வேற


படிக்க காசில்லாம படிக்கிறத
நிறுத்துனவங்க நிறைய பேர்...
ஆனால்...
குடிக்க காசில்லாம,
ஒருத்தன் கூட குடியை
நிறுத்தினதா சரித்திரம் இல்லை....


வாகனங்களின் என்ஜின் சூடு
குறைப்பதற்கு சாலைகளில்
ஆங்காங்கே வசதி
செய்யப்பட்டுள்ளது.
பொதுமக்கள் இதனைப்
பயன்படுத்திக்கொள்ளுமாறு
நெடுஞ்சாலை துறையினரால்
கேட்டுக்கொள்ளப்படுகிறது.


அவன் என்னடானா நான்
அவங்க ஆளுங்குறான்
இவன் என்னடான்னா அவன்
ஆளுங்குறான் ஒருத்தனாச்சும்
திருக்குறளை எடுத்து படிக்கிறானா பாரு


இவனுங்க ஆளாளுக்கு கொடுக்குற
நிவாரண தொகையை பாக்கும் போது
நம்ம வீட்டிலும் நம்மள தூக்கி!
போர்க்குழியில போட்டுறுவாங்களோ!!



**யார் வேண்டுமானாலும் குளத்தை கலங்கடிக்க முடியும்**
**கலங்கிய குளத்தை தெளிய செய்ய அந்த குளத்தால் மட்டுமே முடியும்**
**உன் மனமும் அப்படித்தான் கலங்கிய உன் மனதை உன் மனதால்**
**மட்டுமே தெளிய செய்ய முடியும்**










## ஆண் என்பவன்

ஆண் அழத் தெரியாதவன் அல்ல..
கண்ணீரை விழுங்கத் தெரிந்தவன்..
அன்பில்லாதவன் அல்ல..
அன்பை மனதில் வைத்து
சொல்லில்வைக்கத் தெரியாதவன்..
வேலை தேடுபவன் அல்ல..
தன்திறமைக்கான
அங்கிகாரத்தை தேடுபவன்.
பணம் தேடுபவன் அல்ல..
தன் குடும்பத்தின்
தேவைக்காக ஓடுபவன்..
சிரிக்கத் தெரியாதவன் அல்ல..
நேசிப்பவர்களின் முன்
குழந்தையாய் மாறுபவன்..
காதலைத் தேடுபவன் அல்ல..
ஒரு பெண்ணிடம்தன்
வாழ்க்கையைத் தேடுபவன்..
கரடுமுரடானவன் அல்ல..
நடிக்கத் தெரியாமல் கோபத்தைக்
கொட்டிவிட்டு வருந்துபவன்.



உடனிருப்பவர்களுடன் ஒரு முறையேனும் கருத்து வேறுபாடு ஏற்படவில்லையெனில் நீங்கள் உங்கள் முகமூடியை மிகச் சரியாக பயன்படுத்துகிறீர்கள் என்று அர்த்தம்..!

**உள்ளாடை**
**கிழிந்து அந்தரங்கம்**
**காட்டுகிறாள்**
**கோயில் பிச்சைக்காரி!**
**அவளையும் தாண்டிச்**
**செல்கிறார்கள் சாமிக்கு**
**பட்டுச்சீலை சாத்த!**








# பெண் குழந்தைக்கான பாதுகாப்பு முன்னேற்றம் எப்படி இருக்கிறது?

உலகில் இயற்கை வளங்கள், உயிரினங்களுக்கு அடுத்தபடியாக அதிக அளவு வன்முறைகளை எதிர்கொள்பவர்களாகப் பெண்களே உள்ளனர். பாலினப் பாகுபாடு மிக மோசமான நிலையை எட்டியுள்ளதே பெண்களின் இந்த நிலைக்குக் காரணம். அதிலும் குறிப்பாக, பெண் குழந்தைகள் மீதான வன்முறை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உலக அளவில் அதிகரித்துள்ளது. அதனால்தான் அன்றாடம் சிக்கலை எதிர்கொள்ளும் பெண் குழந்தைகளைப் பாதுகாக்க வலியுறுத்தி ஐ.நா. அவை ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 11 அன்று சர்வதேசப் பெண் குழந்தைகள் நாளைக் கடைப்பிடிக்கிறது.

பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, முன்னேற்றத்தை வலியுறுத்தி 2012-ம் ஆண்டிலிருந்து இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது. இந்த ஆண்டின் மையக்கரு: 'பெண் ஆற்றல்: எழுதப்படாததும் தடுக்க முடியாததும்'.

நவீன வளர்ச்சிகளை எட்டிவிட்டதாக மார்தட்டிக் கொள்ளும் இந்த 21-ம் நூற்றாண்டிலும் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்தை வலியுறுத்த வேண்டிய நிலையிலேயே உள்ளோம். கல்வி என்ற திறவுகோல் போதும் பெண்கள் முன்னேறுவதற்கு. ஆனால், உலக அளவில் அறுபது லட்சம் பெண் குழந்தைகள் கல்வி கிடைக்காமல் உள்ளனர்.

இந்திய அளவில் இரண்டு கோடிக் குழந்தைகள் வகுப்பறைக்கு வெளியே உள்ளனர். 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்' எனப் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை வலியுறுத்தியும் அவர்களுக்கான கல்வி, உணவு, மருத்துவம் ஆகிய அடிப்படை உரிமைகள் தடையின்றிக் கிடைக்கவும் நடவடிக்கை எடுத்துவருவதாக அரசு தெரிவிக்கிறது. ஆனால், நடைமுறையில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பும் கல்வி உரிமையும் உண்மையிலேயே உறுதிசெய்யப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கான பதில், நம்முடைய வீடுகளிலும் சமூகத்திலுமே உள்ளது.

## பெண் கல்வி

* நாட்டில் எழுத்தறிவு பெற்ற பெண்களின் விகிதம் 65 சதவீதம் மட்டுமே.

* ஐந்திலிருந்து ஒன்பது வயதுள்ள 53 சதவீதப் பெண் குழந்தைகள் கல்வி கிடைக்காதவர்களாக உள்ளனர்.

* தமிழகத்தில் 73.9 சதவீதம் பெண்களே கல்வி அறிவு பெற்றவர்கள்.

## பெண் குழந்தை பிறப்பு

* சில மாதங்களுக்கு முன்பு பா.ஜ.க. ஆளும் மாநிலமான உத்தராகண்டில் உள்ள உத்தரகாசி மாவட்டத்தில் உள்ள 132 கிராமங்களில் ஒரு பெண் குழந்தைகூடப் பிறக்கவில்லை என்பது

சாதாரணத் தகவல் அல்ல. பெண் சிசுக் கொலை மோசமான நிலையை எட்டியுள்ளதன் வெளிப்பாடு.

* நாட்டில் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 940 பெண் குழந்தைகளே பிறக்கின்றனர். இது சமூகத்தில் பல்வேறு மோசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியது.

* கடந்த பத்தாண்டுகளில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் 0.75 சதவீதம் மட்டும் அதிகரித்துள்ளது.

* தமிழகத்தில் பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 995 பெண் குழந்தைகள். ஆனால் கேரளம், புதுச்சேரியில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேல்.

* தமிழகத்தில் நீலகிரியில் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 1,041 பெண் குழந்தைகள் எனப் பிறப்பு விகிதம் உயர்ந்து காணப்படுகிறது. தருமபுரியில் 946, தலைநகர் சென்னை யில் 986 எனப் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைவாக உள்ளது.

* குஜராத் மாநிலத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் 918 மட்டுமே உள்ளது. இந்த சதவீதம் முந்தைய 2001 மக்கள்தொகை கணக்கெடுப்பைவிட -0.22 சதவீதம் குறைவு.

### மருத்துவமும் குழந்தைகளும்

* ஒவ்வோர் ஆண்டும் பத்து லட்சம் பெண் குழந்தைகள் பிறந்து சில மாதங்களிலேயே இறக்கின்றனர்.

* நாட்டில் ஆறு பெண் குழந்தை களில் ஒருவர் தன்னுடைய பதினைந்தாம் பிறந்த நாளைப் பார்க்கும் முன்பே இறந்துவிடுகிறார்.

* நான்கு வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளின் இறப்பு ஆண் குழந்தைகளைவிட அதிக மாக உள்ளது.

* ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகளே அதிக சுகாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகிறார்கள்.





* உரிய மருத்துவ சேவை கிடைக்காத காரணத்தாலேயே பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது.

### பெண் குழந்தைக் கடத்தல்

* ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் பெண் குழந்தைகள் 1.2 கோடிப் பேர் பாலியல் தொழிலுக்காகக் கடத்தப்படுகிறார்கள்.

* இந்தியாவில் கடந்த 2016-ம் மத்திய அரசு வெளியிட்ட தகவலின்படி கடத்தப்பட்டுள்ள பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் எண்ணிக்கை 20,000.

* கிராமப் பகுதிகளில்தான் குழந்தைக் கடத்தல் அதிக அளவு நடைபெறுகிறது.

* குழந்தைக் கடத்தல் நடைபெறும் மாநிலங்களில் தென்னிந்தியாவில் கர்நாடகம், ஆந்திரத்துக்கு அடுத்த இடத்தில் தமிழ்நாடு உள்ளது.

* கடத்திச் செல்லப்படும் பெண் குழந்தைகளில் 22 சதவீதத்தினர் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என அரசின் குற்ற ஆவணக் காப்பகம் தெரிவிக்கிறது.

* கடத்திச் செல்லப்படும் குழந்தைகள் பாலியல் தொழிலிலும், வீட்டு வேலைகளிலும் ஈடுபடுத்தப் படுகிறார்கள்; சிலருக்குக் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்படுகிறது.


இயற்கை வளங்களை அழித்துவிட்டால் பூமியில் வாழ முடியாது. அதுபோல் பாலினப் பாகுபாட்டால் பெண் குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள் தடுக்கப்படுவது, பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, முன்னேற்றம் சார்ந்து ஒவ்வொரு தனிநபரின் எண்ணத்தில் மாற்றம் நிகழ்வது போன்றவை தொடங்காதவரை பெண்களுக்கு மட்டுமல்ல, உலகுக்கும் விடிவு இல்லை.

- M. **தரணி**

# உயிர் காக்கும் மருந்தா, உயிறை எடுக்கும் மருந்தா?

சிறுநீரகம் செயலிழந்து, மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக்கொண்ட நோயாளிகளுக்கு மாதந்தோறும் இலவசமாக தமிழ்நாடு அரசு 'உயிர் காக்கும் மருந்துகள்' என்று வழங்குகிறது. உயிர் காக்கும் இலவச மாத்திரைகள் பெறுவதற்குத் தகுதியானவர், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 உள்ளவர்கள் மட்டுமே. உயிர் காக்கும் இலவச மாத்திரைகள் பெறுவதற்குக் குடும்ப நலம் மற்றும் சுகாதாரத் துறைச் செயலரிடம் அனுமதி ஆணை பெற வேண்டும். பெறப்பட்ட ஆணையை மூன்று மாதத்துக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும். புதுப்பிக்கத் தவறினாலோ, புதுப்பித்த ஆணையின் நகல் நோயாளியின் கைக்குக் கிடைப்பதற்குத் தாமதமானாலோ நோயாளி மாத்திரைகளைப் பெற இயலாது. அதேபோல், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.73,000 இருந்தாலும் உயிர் காக்கும் இலவச மாத்திரைகளைப் பெற முடியாது.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக்கொண்ட நோயாளிக்கு மருத்துவர் பரிந்துரைக்கும் எல்லா மாத்திரைகளுமே அரசு மருத்துவமனையில் இலவசமாகக் கிடைக்கும் என்று கூற இயலாது. அரசு மருத்துவமனையில் கிடைக்காத மாத்திரைகளை நோயாளிகள் தனியாரில் வாங்கித்தான் சாப்பிட வேண்டும். இலவசமாக அரசு வழங்கும் மாத்திரைகளைக்கூட சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் மட்டும்தான் வாங்க முடியும். விலை உயர்ந்த உயிர் காக்கும் மருந்துகள் தஞ்சாவூர், மதுரை ஆகிய ஊர்களில் உள்ள மருத்துவமனைகளில் வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும் அங்கே போய்க் கேட்டால் 'ஸ்டாக் இல்ல. சென்னைக்குப் போங்க' என்றுதான் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட நோயாளிகளும் மாதந்தோறும் சென்னைக்கு வந்துதான் மாத்திரைகளை வாங்கிக்கொண்டு போகிறார்கள். கன்னியாகுமரியிலுள்ள நோயாளி சென்னைக்கு வந்து செல்ல குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் செலவாகும். பயணச் செலவுக்குப் பணம் இல்லாததாலேயே பல நோயாளிகள் மாத்திரைகள் வாங்காமல் விட்டுவிடுகிறார்கள்.



தொடர்ந்து மாத்திரைகளைச் சாப்பிட இயலாத நிலையில், புதிதாகப் பொருத்திக்கொண்ட சிறுநீரகமும் பொருந்தாமல் போய்விடுகிறது. மாத்திரைகளை வாங்குவதற்காக சென்னைக்கு வந்து செல்லும்போது பல நோயாளிகளுக்குத் தொற்று ஏற்பட்டு, புதிதாகப் பொருத்திய சிறுநீரகம் செயலிழந்துவிடும் நிலை ஏற்படுகிறது. இப்படியாக, உயிரைக் காத்துக்கொள்ள மாத்திரை வாங்குவதற்காகப் போய், உயிரை விடும் அவல நிலை ஏற்படுகிறது.

2017-ம் ஆண்டு மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தனிநபரின் குறைந்தபட்ச ஒரு நாள் ஊதியம் எவ்வளவு என்று தீர்மானிக்க அனுப் சத்பதி தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை அமைத்தது. ஓராண்டு ஆய்வுசெய்த வல்லுநர் குழு 2018-ல் தனிநபருக்கான ஒரு நாள் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து மத்திய அரசுக்கு அளித்தது. வல்லுநர் குழுவின் பரிந்துரையைத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் இணையதளத்திலும் வெளியிட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாட்டில் வசிக்கும் தனிநபர் ஒருவரின் ஒரு நாள் ஊதியம் குறைந்தபட்சம் ரூ.414 அல்லது ஒரு மாதத்துக்கு ரூ.10,794 என்பதாகத் தீர்மானித்திருக்கிறது.

தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலச் சட்டத்தின்படி தனிநபரின் ஒரு நாள் ஊதியமாக எவ்வளவு நிர்ணயித்திருக்கிறது? ஒரு நாளுக்கு ரூ.300 என்று வைத்துக்கொண்டால்கூட, மாதத்துக்கு ரூ.9,000 வருகிறது. ஆண்டுக்கு ரூ.1,08,000. கணவனுக்கும் மனைவிக்கும்



என்று சேர்த்துக்கொண்டால் ரூ.2,16,000 என்றாகிறது. இந்தக் கணக்கு சட்டத்தின்படி மட்டுமே. நிஜத்தில் கூடலாம், குறையலாம். தனிநபருக்கு ஆண்டு வருமானம் ரூ.1,08,000 என்று சொல்கிற தமிழக அரசின் சட்டமானது, உயிர் காக்கும் மருந்து பெறவும், மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை செய்துகொள்ளவும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 மட்டுமே இருக்க வேண்டும் என்று சொல்வது முரண் அல்லவா? அரசே, அரசின் சட்டத்தை மீறுகிறது. உழவர் காப்பீட்டுத் திட்டம் உள்ளவர்களுக்கு மட்டுமே இச்சலுகையை வழங்குகிறது. 2019-ல் தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பவர்களின் ஆண்டு வருமானம் நிச்சயம் ரூ.72,000-த்தைத் தாண்டித்தான் இருக்கும். அரசே ஒரு லிட்டர் தண்ணீரை 10 ரூபாய்க்கு விற்கும்போது, ஆண்டு வருமானம் ரூ.72,000-க்குள் இருப்பவர்களால் எப்படி உயிர் வாழ முடியும்? தமிழ்நாட்டில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 மட்டுமே உள்ள எத்தனை குடும்பங்களைத் தமிழக அரசால் இன்று காட்ட இயலும்?

சிறுநீரகச் செயலிழப்பு என்பது இப்போது வேகமாகப் பரவிவரும் நோயாக இருக்கிறது. ஒரு குடும்பத்தில் யாருக்காவது சிறுநீரகம் செயலிழந்துவிட்டது என்றால், அந்தக் குடும்பத்தின் துயரைச் சொல்ல இயலாது. மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக்கொண்ட ஒரு நோயாளி சாகும் நாள்வரை மாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். மாதத்துக்குக் குறைந்தது ரூ.12,000-க்கும் அதிகமாக மாத்திரைக்கு மட்டுமே செலவிட வேண்டும். வசதியான குடும்பம் என்பதுகூட சிறுநீரகச் செயலிழப்பு என்ற நோயால் தெருவுக்கு வந்துவிடும், சென்னை ராமச்சந்திரா மருத்துவமனையில் மட்டும் ஒரு நாளைக்கு 150 பேர் டயாலிஸிஸ் செய்துகொள்கிறார்கள் என்றால், தமிழகம் முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் டயாலிஸிஸ் செய்துகொள்கிறவர்களின் எண்ணிக்கை குறைந்தது பத்தாயிரமாவது இருக்கும்.

உயிர் காக்கும் மருந்துகளை வாங்குவதற்காகப் போய் உயிரை விட நேர்கிற நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து மாத்திரைகளை, உணவுப் பொருட்களை வீடு தேடிச் சென்று கொடுப்பதில் முன்னோடியாகத் திகழ்கிறது தமிழக அரசு. மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக்கொண்ட நோயாளிகளுக்கும் ஏன் வீடு தேடிப் போய் மாத்திரைகளை வழங்கக் கூடாது? மாற்றுச் சிறுநீரகம் பொருத்திக்கொண்ட நோயாளிகளை மட்டும் அரசு ஏன் அலைக்கழித்துக் கொல்கிறது? தமிழக அரசு நோயாளிகளைக் காக்க விரும்புகிறதா? சாகடிக்க விரும்புகிறதா? ஏனைய மாநிலங்களை விட தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பு முன்னோடியானது. இப்படிப்பட்ட மாநிலத்தில், ஒரு மக்கள் நல அரசு என்பது மக்களுக்கு உதவும்போது நடைமுறையில் உள்ள பிரச்சினைகளையும் கணக்கில்கொள்ள வேண்டும்.

**- V. அருணாச்சலம்**

# உள்ளாட்சித் தேர்தலிலும் வெற்றி தொடருமா?

வேலூர் மக்களவைத் தேர்தலில் நூலிழையில் வெற்றியைத் தவறவிட்ட அதிமுக, சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற இடைத்தேர்தலில் தன்னை மீண்டும் நிலைப்படுத்திக்கொண்டிருக்கிறது. திமுகவின் வசமிருந்த விக்கிரவாண்டியும் காங்கிரஸின் வசமிருந்த நாங்குநேரியும் இப்போது அதிமுகவின் தொகுதிகளாக மாறியிருக்கின்றன. விக்கிரவாண்டியில் நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளையும், நாங்குநேரியில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளையும் பெற்று அதிமுக வேட்பாளர்கள் வென்றிருக்கிறார்கள். பழனிசாமிக்கு இது மும்முனை வெற்றி. சட்டமன்றத்தில் அவருக்குத் தேவையான பெரும்பான்மை ஆதரவு உறுதிப்பட்டிருக்கிறது, கட்சிக்குள் எழும் சலசலப்புகளை வெற்றிகரமாகக் கையாண்டு தனது தலைமைக்குக் கூடுதல் வலுவைச் சேர்த்துக்கொண்டிருக்கிறார், கூட்டணிக் கட்சிகளுடனான பேர சக்தியையும் பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்.



தேர்தலில் கிடைக்கும் வெற்றி என்பது எப்போதுமே வெற்றிபெற்ற கட்சியினரை உற்சாகப்படுத்தும், ஊக்கப்படுத்தும். கடந்த மக்களவைத் தேர்தலில் ஒரே ஒரு தொகுதியை மட்டுமே வெல்ல முடிந்த அதிமுகவுக்கு இடைத்தேர்தல் முடிவுகள் அளவுக்கதிகமான உற்சாகத்தைக் கொடுத்திருக்கின்றன. தமிழகம் முழுவதும் பேருந்து நிலையங்களுக்குள் நுழைந்த அதிமுக நிர்வாகிகள் பயணிகளுக்கு இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்; லட்டுகளை ஊட்டிவிடாத குறை மட்டும்தான்.

தேர்தல் முடிவுகள் அதிமுகவுக்குச் சாதகமாக இருப்பது உறுதிப்பட்டதும் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு வந்த பழனிசாமி தொண்டர்களோடு தொண்டராய் நின்று இனிப்புகளைப் பகிர்ந்துகொண்டார். இதற்கு முன்பு உப்பரிகையைப் பார்த்து கையசைத்த தொண்டர்கள் தலைவரோடு கைகுலுக்கித் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டார்கள். 'திமுகவின் பொய்ப் பிரச்சாரம் எடுபடவில்லை, இது உண்மைக்குக் கிடைத்த வெற்றி, தர்மமும் நீதியுமே எப்போதும் வெல்லும்' என்று பேசினார் பழனிசாமி. அதிமுகவுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. அரசு இயந்திர பலம், பண பலம், படை பலம் என்று சர்வ பலங்களும் சேர்ந்து கொடுத்த வெற்றி இதுவென்றாலும் எல்லாவற்றைத் தாண்டியும் பழனிசாமியின் தலைமைக்குக் கிடைத்திருக்கும் வெற்றி இது!

மக்களவைத் தேர்தலில் அமைந்த அதிமுக-பாமக கூட்டணி, அந்தத் தேர்தலில் வெற்றிக்குப் பயன்படாமல்போனாலும் விக்கிரவாண்டி தொகுதியில் கைகொடுத்திருக்கிறது. மத்தியில் ஆளும் பாஜகவுடன் கைகோத்துக்கொள்ள பாமக ஆர்வம் காட்டுகிறது. பாஜக எதிர்ப்புதான் திமுகவின் முக்கிய அஸ்திரம் என்பதால், அதிமுகவுடன் நல்லுறவு பேணுவதுதான் பாமகவுக்குத் தற்போது இருக்கும் ஒரே வழி. அதிமுக அமைச்சர் சி.வி.சண்முகம், பாமகவுக்கு இடையேயான உறவு சிக்கலாக இருந்தாலும், தேர்தல் வேலைகளில் பாமக தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டதற்கு அதுவும் ஒரு காரணம். தேர்தல் நேரத்தில் உள்முரண்பாடுகள் எழுந்துவிடாத வகையிலும் கூட்டணிக் கட்சிகளுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படாத வகையிலும் கண்ணும் கருத்துமாக நடந்துகொள்கிறார் பழனிசாமி. தொடர்புடையவர்களை நேரில் அழைத்து அவரே சமாதானப்படுத்தி அனுப்புகிறார். இதுவும் சேர்ந்துதான் அதிமுகவின் வெற்றிக்குக் களம் அமைத்துக்கொடுத்திருக்கிறது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது வழக்கமான மேடைப் பேச்சுகளைத் தவிர்த்துவிட்டு மக்கள் சந்திப்பாக அதை மாற்றிக்கொண்டார் மு.க.ஸ்டாலின். நாங்குநேரி தொகுதியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ரூபி மனோகரனோடு அவர் நடந்து சென்றே வாக்கு கேட்டார். வாக்காளர்களிடம் மனுக்களைப் பெற்று, அங்கேயே அப்போதே

ஆலோசனைகளையும் தீர்வுகளையும் சொன்னார். திமுகவின் ஆட்சிக்காலத்தில் பெண்கள் முன்னேற்றத்துக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப் பற்றி பேசியபோது, அவரைச் சூழ்ந்து நின்ற பெண்கள் நெகிழ்ந்துபோனார்கள். ஸ்டாலின் கலந்துகொண்ட மற்றொரு மக்கள் சந்திப்பில் அங்கு வந்திருந்த மாற்றுத் திறனாளியால் அவரிடம் தன் எல்லாக் குறைகளையும் சொல்லி உரையாட முடிந்தது. இப்படி ஸ்டாலின் கலந்துகொண்ட வாக்குச் சேகரிப்புப் பயணங்கள் பலவும் ஆக்கபூர்வமாக அமைந்திருந்தாலும் திமுக கூட்டணிக்கு வெற்றியை அவை வழங்கவில்லை.



காரணம் ஸ்டாலினுக்குத் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. மக்களவைத் தேர்தல் முடிவுகள் வந்த கையோடு, மகன் உதயநிதியை அவர் இளைஞர் அணியின் தலைவர் ஆக்கியதும், உதயநிதி செல்லும் இடங்கள் எல்லாம் இப்போதே அவர்தான் ஸ்டாலினுக்கு அடுத்த நிலையிலுள்ள தலைவர் என்பது மாதிரி செய்யப்படும் தடபுடல் ஏற்பாடுகளும் திமுக மீண்டும் குடும்ப வாரிசு அரசியல் கலாச்சாரத்துக்குள் மூழ்கிக்கொண்டிருப்பதை அக்கட்சியினரே பிரகடனப்படுத்துவதுபோல் அமைந்துவிட்டது. ஸ்டாலின் மீது இன்னமும்கூட குடும்ப வாரிசு எனும் அடையாளம் சுமத்தப்பட்டு வரும் நிலையில், உதயநிதியின் வருகை யாராலும் ரசிக்கப்படவில்லை. கட்சிக்குள்ளுமே எல்லா நிலைகளிலும் நிர்வாகிகள் தங்கள் வாரிசுகளைக் களம் இறக்கிவிடுவார்களோ என்ற கவலை எல்லோரையும் தொற்றியிருக்கிறது. மக்கள் வெற்றியைக் கொடுத்துவிட்டதாலேயே முழுக்க தான் நினைப்பதுபோலெல்லாம் செயல்படலாம் என்ற நிலைக்கு திமுக செல்வதை யாரும் விரும்பவில்லை என்பதற்கான சமிக்ஞை என்றும் இந்தத் தோல்வியைத் தாராளமாகச் சொல்லலாம்.



மேலும், அதிமுகபோல நேரடி சாதி அரசியல் கணக்குகளுக்குள் திமுக செல்வதும் அதற்குத் தோல்வியையே தரும் என்பதும் இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. 'வன்னியர்களுக்கு உள் ஒதுக்கீடு' என்ற அறிவிப்பு சமூக நீதிக்கு வலு சேர்ப்பதாக இருக்கலாம். ஆனால், தேர்தல் சமயத்தில் அதை அறிவித்ததில் உள்ள ஓட்டரசியல் கணக்கு மோசமானது. சாதிரீதியில் ஏற்கெனவே திமுகவை உசுப்பிவிடுவதுபோல பாமக பேசிவந்த நிலையில், திமுக இதன் மூலம் தன் பங்குக்குத் தானே அந்த வலையில் போய் சிக்கிக்கொண்டது. விளைவாக, வன்னியர் சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்குப் பதிலாக தலித்துகள் ஆதரவை திமுக இழந்ததுதான் நடந்தது.

'இடைத்தேர்தல் என்றால் ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத்தானே வாக்குகள் விழும், அவர்கள் வெல்வதுதானே வழக்கம்' என்ற வழக்கமான வாதத்தை எதிர்க்கட்சிகள் இப்போது அதிமுகவுக்கு எதிராக வைக்க முடியாது. ஏனென்றால், இந்த ஆட்சி எப்போதும் கவிழக்கூடும் என்று தினம் ஒரு கணிப்புக்கு ஆளான ஆட்சி இது, உட்கட்சிச் சிக்கல்கள் இன்னமும்கூட முழுமையாக முடிவுக்கு வராமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது அதிமுக. இவ்வளவுக்கும் இடையில்தான் அக்கட்சியால் இடைத்தேர்தலில் வெற்றிபெற முடிந்திருக்கிறது.

மக்களவைத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழகம் முழுவதும் நிலவிய பாஜகவுக்கு எதிரான மனோநிலை, அதிமுகவையும் அதன் கூட்டணிக் கட்சிகளையும் தோல்வியடையச் செய்தது. அந்த மக்களவைத் தேர்தலில் திமுகவால் பெருவெற்றியைப் பெற முடிந்தாலும் சட்டமன்ற இடைத்தேர்தல்களில் முழு வெற்றியைப் பெற முடியாமல்போனது. மத்தியில் மீண்டும் பாஜக ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் நிலையில், அடுத்துவரும் சட்டமன்றத் தேர்தல் வரைக்கும் மக்களின் அதே பாஜக எதிர்ப்பு மனோபாவம் தொடரும் என்று சொல்ல முடியாது.

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் இருக்கின்றன. அது ஸ்டாலினுக்கும் பழனிசாமிக்கும் இடையிலான போட்டி என்பதும், பழனிசாமி எளிதில் தோற்கடிக்கப்படக்கூடியவர் இல்லை என்பதும் இப்போது உறுதியாகியிருக்கிறது. ஆளுங்கட்சிக்கு எதிரான மக்களின் மனோநிலை மட்டுமே தற்போது ஸ்டாலினுக்கு ஆதரவான ஒரே வாய்ப்பு. அதுவும் இந்த இடைத்தேர்தலில் எதிரொலிக்கவில்லை. அதை மட்டுமே நம்பிக்கொண்டு எதிர்க்கட்சிகள் களம் காண்பதும் அசட்டுத்தனம். மேடைகளில் கொள்கை, அனுபவம் என்று எவ்வளவோ பேசினாலும் தேர்தல் வெற்றிகள் என்பவை தங்கத் தட்டில் வைத்து தானாகப் பரிசளிக்கப்படுவதில்லை. முயல், ஆமை கதையெல்லாம் பள்ளிநாட்களில் எல்லோரும் படித்ததுதானே?

**- ஆசிரியர்**

# கல்வி டுடே-வின் 150-வது மாத இதழ் வாழ்த்து

**கி.ராமசுப்ரமணியன்**
ஆசிரியர் & வெளியீட்டாளர்
கல்வி டுடே




தொடாத கருவில்லை கையாளாத வார்த்தையில்லை
விடா முயற்சியோடு சமூகத்திற்கு 'கல்வி டுடே' கொடுத்தீர்
கடாரம் தாண்டி கல்வி பூ பந்தில் இதழை வளர்த்தீர்
அடாத தடை வரினும் விடாமல் தமிழ்த் தொண்டு செய்தீர்

அனுபவம் தந்த முதிர்ச்சியாய்ப் பழுத்த கவிதைகள்
ஆழ்ந்த கருத்துக்கள் அசைபோடும் கட்டுரைகள்
இலக்கணச் சுத்தமாய் இலக்கிய வடிவாய்
அனைவரும் பயன்பெறும் விதத்தில் பதித்தீர்கள்
குறை சொல்ல ஒன்றுமில்லை
வாழ்த்தி வணங்குகின்றேன்

வாழ்க நின் புகழ்
வாழ்க நின் தமிழ்த் தொண்டு
இன்பத் தமிழின் இறவாப் புகழோங்க
அன்பு மனம்தோய அறிஞராக்கியஇலக்கியத்தை!
கண்ணின் மணியாய் கருத்தின் திருவுருவாய்
எண்ணி மகிழ்ந்து எம்மினத்தின் துயர்போக்க
அள்ளி இறைத்தீர் அறிவுநூல் 'நூற்று ஐம்பது'!
இன்னும் தொடரட்டுமே இத்தனை ஆண்டு!
அத்தனையும் உங்கள் அறிவுக்குசான்று!

* * *

முகமில்லாமல் போன எத்தனையோ முகங்களுக்கு
முகம் கொடுத்த பத்திரிகைகளில்
முத்தாய்ப்பாய் ஜொலிக்கிறது 'கல்விடுடே'.
கல்விச் செல்வம் பெறுவதற்கு பொருட் செல்வமற்ற
கள்ளமில்லா உள்ளங்களுக்கு 'கற்பகத் தரு'வாய்
தொடர்கிறது.

வலிகளைக் கூட வலிந்து சென்று ஏற்றுக் கொண்டு
கற்போர் முகங்களில் மகிழ்ச்சியைத் தரும் மந்திரமாய்
இருக்கிறது.
ரிதமோ, இசையோ, பொருளோ தராத ஞானத்தைத்
தரும் கல்விக்கே முகவரியாய் 'கல்வி டுடே' திகழ்கிறது

வெற்றியெனும் கரையை கடக்க
தோல்வியெனும் அலையை
முயற்சியெனும் ஆயுத்தால் தான் வெல்ல முடியும்.

கடந்த காலத்தில் கற்றதை வைத்து
நிகழ்காலத்தில் நித்தம் உழைத்ததால் 'நூற்று ஐம்பது'
இது தொடர்ந்தால்
எதிர்காலத்தை இனிமையாக மாற்ற முடியும்.
முடியும் என எண்ணிணாலே
பாதி முடிந்து விடும்.

முயற்சி செய்யுங்கள்!
முக்காலமும் பயிற்சி செய்யுங்கள்!!
வெற்றி உங்கள் வசம்!!!

வாழ்த்துகளுடன்

முனைவர் ஆ.மவுரியன்
ஆசிரியர் & வெளியீட்டாளர்



# முற்றுப்புள்ளி எப்போது?



அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவான தேவை உணவு. உலகம் முழுவதும் பட்டினியால் தினமும் பலர் இறந்து வருகின்றனர். உணவின்றி மடியும் நிலையை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை ஐ.நா சபை எடுத்து வருகிறது. நாகரிகத்திலும், அறிவியலிலும் உச்சம் தொட்டும் கூட, உலகின் பல பகுதிகளிலும் மக்களுக்கு சரிவிகித உணவு கிடைக்காமல் இருப்பது பரிதாபமே. 'தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடினார் பாரதி. இந்தியாவில் பல கோடி பேர் இரவு உணவு இல்லாமல் தூங்குகின்றனர். வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றான இந்தியாவில், ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு கூட கிடைக்காமல் ஏராளமானோர் திண்டாடுகின்றனர்.

மத்திய அரசு நடத்திய விரிவான தேசிய ஊட்டச்சத்து கணக்கெடுப்பில், இந்தியாவில் 2 வயதுக்கு உட்பட்ட 6.4% குழந்தைகள் உணவு பற்றாக்குறையுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அதிகப்பட்சமாக, சிக்கிம் மாநிலத்தில் 35.9% குழந்தைகள் போதிய உணவில்லாமல் இருக்கின்றனர். தமிழகத்தில் 4.2% குழந்தைகள் போதிய உணவில்லாத நிலையில் உள்ளனர். மத்திய சுகாதாரத்துறை நடத்திய ஆய்வில், இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட 35% குழந்தைகள் வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லாமலும், 17% குழந்தைகள் வளர்ச்சிக் கேற்ற எடையின்றியும், 33% குழந்தைகள் வயதுக்கேற்ற எடையின்றியும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

சாலையோரங்களில் வசிக்கும் குழந்தைகள் ஒரு வேளை உணவுக்காக பல இன்னல்களை சந்திக்கின்றனர். குப்பைத் தொட்டியில் கொட்டப்படும் உணவுகளை எடுத்துச் சென்று சாப்பிடும் அவல நிலை இன்னமும் தொடர்கிறது. வளர்ச்சி என்ற பாதையில் பயணிக்க, வறுமையை ஒழிப்பது பேரவசியம். அதற்கு அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்திட வழிவகை செய்ய வேண்டும். படித்தால் வேலை கிடைக்கும் என்பதை உறுதி செய்ய வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களை கணக்கெடுத்து, அவர்களின் குழந்தைகளுக்கு இலவச உணவு கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைவருக்கும் வேலை கிடைத்தாலே வறுமை என்ற 'கொடிய நோய்' இருக்காது. பொருளாதார மந்தநிலையால் வேலையிழப்புகள் அதிகரிக்கிறது. வேலையிழப்பு விபரீதங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுடன், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். குழந்தைகள் சிறுவயதிலேயே வயதுக்கேற்ற வளர்ச்சி இல்லாமல் இருந்தால் எதிர்காலத்தில் அவர்கள் பல்வேறு பிரச்னைகளை சந்திப்பார்கள். நாட்டின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமான தலைமுறை மிக அவசியம். உணவின்றி தவிக்கும் குழந்தைகளுக்கும், அனைவருக்கும் சரி சமவிகித உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது.

**– முனைவர் M. சத்தியராஜ்**

# இளையோர் ஏன் வாசிக்க வேண்டும்?

தமிழகம் இந்தியாவின் அதிகக் கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் ஒன்று. ஆனால், பாடப்புத்தகங்கள் அல்லாத நூல்களின் வாசிப்பில் கல்வியறிவு பெற்ற பிற மாநிலங்களைவிடப் பின்தங்கி நிற்கிறது. கடந்த 150 ஆண்டுகளில் தமிழகத்தில் சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் எழுச்சி பெற்றுள்ளார்கள். கல்வியிலும் பொருளாதாரத்திலும் தமிழ் மக்கள் வளர்ச்சி பெற்றுள்ளார்கள். இத்தகைய காலகட்டத்தில் ஒரு சமூகத்தின் கவனம் கல்வியிலும் பொருள் ஈட்டும் படிப்பிலும் இருப்பது இயல்புதான். ஆனால், ஒரு சமூகத்தின் பரிணாம வளர்ச்சி பொருளாதார முன்னேற்றத்துடன் நின்றுவிடுவதில்லை. நல்ல உணவு, கல்வி, மருத்துவம், குடியிருப்பு, உடை ஆகியவற்றுக்கு வகைசெய்யும் பொருள்வசதி மிக முக்கியமானது. அதேநேரம், மனிதரின் அகம் மேன்மையடைய இலக்கியம், சிந்தனைகள், ஆன்மிகம் வழி கிடைக்கும் விவேகம் மிக முக்கியமானது. எத்துறையில் இயங்குவோரும் பரந்துபட்ட வாசிப்பு இருந்தால், தத்தமது துறைகளில் மேன்மையடைய முடியும்.

இதில் மதம் நோக்கி ஏற்பட்டிருக்கும் பெரும் ஈர்ப்பில் ஒரு சிறுபகுதிகூட வாசிப்பு நோக்கி நகரவில்லை. பண்பாட்டுத்தளத்தில் பெரும் பகுதியைத் திரைப்படங்கள் கையகப்படுத்தியிருப்பது ஆரோக்கியமானதன்று. ஊடகங்கள் திரைப்படத் துறைக்குத் தரும் கவனத்தில் நூற்றிலொரு பங்குதான் புத்தகப் பண்பாட்டுக்குத் தருகின்றன. பண்பாட்டில் பெரும் கவனம் கொண்டிருக்கக்கூடிய வளர்ச்சியடைந்த பிரெஞ்சுச் சூழலின் புள்ளிவிவரங்களைப் பார்க்கையில், மொத்த பண்பாட்டுப் பொருளாதாரத்தில் புத்தகத் தொழிலின் பங்கு திரைப்படங்களின் பங்கைவிட மிக அதிகமாக இருந்தது. தமிழகத்தின் மொத்த புத்தகப் பொருளாதாரம் ஒரு நட்சத்திர நடிகர் ஒரு திரைப்படத்துக்குப் பெறும் ஊதியத்துக்கு நிகராகுமா என்பது சந்தேகம். திரை, புத்தகம், நுண்கலை மூன்றுக்கும் உரிய கவனமளிக்கும் பண்பாடே மேன்மையடைய முடியும்.



நமது பொது அரங்குகளில் கருத்துக்கூறும் சான்றோர் உடனே இளைய தலைமுறை படிப்பதில்லை எனக் குறைகூறி அமைதி காண்பார்கள். இது தவறான, ஆதாரமற்ற பார்வை என்பது ஒருபுறம் இருக்க, இன்றைய தலைமுறைக்குப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு மூத்தோருக்கு உண்டு. அப்பொறுப்பு எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். பாடப்புத்தகம் அல்லாத எந்த நூலையும் ஒரு இளையர் வாசிக்கையில், பொருள் ஈட்டும் கல்விக்குச் செலவிட வேண்டிய கவனம் சிதறுவதாகக் கண்டிக்கும் பெற்றோரே அதிகம். தனது இணை இலக்கியப் படைப்புகளை வாசித்தால், எங்கே சிந்திக்கத் தொடங்கி வாழ்க்கையை 'மேம்படுத்தும்' ஒத்தையடிப் பாதையிலிருந்து விலகி பயணித்துவிடுவார்களோ என்று பதற்றமடையும் கணவர்களும் மனைவியர்களும் அதிகம். இதுபோல, கல்வி நிறுவனங்களில் பாடப்புத்தகங்களைத் தாண்டிய வாசிப்பை வரவேற்கும் மனப்பாங்கு ஆகக் குறைவு. மனப்பாடம் செய்தல், மதிப்பெண் பெறுதல் ஆகியவற்றிலேயே இளையரின் கவனம் குவியவைக்கப்படுகிறது. இதுவே தமிழ்ச் சமூகத்தின் பொது மனநிலை. இதிலிருந்து வளரும் இளையர் இவ்வளவு வாசிப்பதே அதிசயம்.

பாடப்புத்தகங்கள் அதிகமும் நேற்றைய உலகைப் பிரதிபலிப்பவை. இன்று காலமாற்றமும் தலைமுறை மாற்றமும் மிக வேகமாக ஏற்படுகிறது. அதேவேகத்தில் பாடப்புத்தகங்களை மேம்படுத்த ஆசிரியர் பெருமக்கள் விரும்புவது இல்லை. ஒரு



பாடப்புத்தகத்தில் எவை இடம் பெறலாம் என்பது பற்றிய பார்வை பண்பாட்டுக் காவலர்களாலும் அரசியல்வாதிகளாலும் வரையறுக்கப்பட்டதாகும். எனவே, சமூகத்தில் ஏற்படும் பண்பாட்டு மாற்றங் களையும் மாறிவரும் மனோபாவங்களையும் பாடப்புத்தகங்கள் காட்டுவதில்லை. பாடப் புத்தகங்கள் மாறுகையில் ஆசிரியர்களும் தம்மை மேம்படுத்திக்கொண்டால்தான் மாணவர் பயன்பெற முடியும். இது இயல்பாக நடந்து விடுவது இல்லை. ஆகவே, பாடப்புத்தகக் கல்வியிலிருந்து உருவாகும் சமகாலம் பற்றிய விழிப்புணர்வு போதாமைகளுடன்தான் இருக்க முடியும். சமகாலத்துடன் உயிரோட்டமான உறவை ஏற்படுத்திக்கொள்ள சீரிய இதழ்களையும் இலக்கியத்தையும் ஆய்வுகளையும் படிப்பது இன்றியமையாதது.

'கதைகளைப் படிப்பது நேரத்தை வீணடிப்பதாகும்' என்ற கருத்து தமிழ்ச் சமூகத்தில் ஆழ வேரூன்றியுள்ளது. நமது கல்வி அமைப்பு இக்கருத்துக்கு வலுசேர்க்கிறது. ஆசிரியர் பெருமக்கள் இக்கருத்தை உறுதிசெய்கிறார்கள் (விதிவிலக்குகள் முக்கியமானவை எனினும், அவற்றை இங்கே கருதவில்லை). அப்படியே இளையர் கதைகளைப் படித்தாலும் அவை ஒழுக்கம் பற்றிய அறிவுரைகள் வழங்குபவையாக இருக்க வேண்டும் என்ற கருத்து பசுமரத்து ஆணிபோலப் பதிந்துள்ளது. கதைகள், ஒரு சமூகம் தனது அனுபவத்தையும் விவேகத்தையும் சேமித்துவைக்கும் பெட்டகங்களாகும். நல்ல இலக்கியம் நமக்கு வாழ்க்கையை விமர்சனப் பார்வையுடன் அணுகி அறிந்துகொள்ளவும் உணர்ந்துகொள்ளவும் வகைசெய்கிறது. அவை ஒழுக்கத்தைப் போதிப்பதில்லை; ஆனால், அறத்தை உணரச்செய்கின்றன. போதனை எப்போதுமே இளையர்களிடம் ஒவ்வாமையை ஏற்படுத்துகிறது.

அதேபோல சீரிய அச்சு, இணைய இதழ்களை வாசித்தலும் முக்கியம். வெகுமக்களுக்குரிய அச்சு, இணைய, காட்சி ஊடகங்கள் அதிகமும் பெரும் பான்மையினரின் கருத்துகளைப் பிரதிபலிக்கையில் சீரிய இதழ்கள் ஊடகங்களின் கவனத்தில் விடுபட்ட மாற்றுச் செய்திகளையும் பார்வைகளையும் முன்வைக்கின்றன. உதாரணத்துக்கு, பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆறுகளை இணைக்கும் திட்டத்தை ஊடகங்கள் பிரச்சாரம் செய்கையில் இந்தியாவின் பல மொழிகளில் அத்திட்டம் பற்றிய விமர்சனங்களும் மாற்றுப் பார்வையும் சீரிய ஊடகங்களில்தான் வெளிவந்தன. இன்று அந்தப் பார்வை வெகுமக்கள் ஊடகங்களிலும் கவனம் பெறுகின்றது. அதேபோல ஊடகச் செய்திகளை அப்படியே 'உண்மை' என்று நம்புவது பொதுமக்கள் மனநிலை. ஆனால், ஊடகங்கள் எதைத் தவிர்க்கின்றன, எதைக் கவனப்படுத்துகின்றன என்பதை உணர்ந்து விமர்சன நோக்குடன் அணுக சீரிய இதழ் வாசிப்பு இன்றியமையாததாகிறது.



பாடப்புத்தகக் கல்வி வேலைவாய்ப்பை வழங்கும். வாழ்க்கையைக் கற்க நல்ல இலக்கியத்தையும் இதழ்களையும் வாசித்தல் அவசியம். உடனடியாக வாழ்க்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவாத, ஆனால், வாசகரின் முழுமையான வளர்ச்சிக்கு வகைசெய்யும் நூல்களின் விற்பனையிலும் தமிழகம் முன்னிற்க வேண்டும். முன்னோரின் பண்பாட்டுச் செழுமையை உணர்ந்து பெருமிதம் கொள்வது சிறப்புதான். அதேவேளையில், பெருமிதத்துக்குரிய சமகாலத்தை உருவாக்குவது அதைவிடச் சிறப்பானது. பரந்துபட்ட வாசிப்பின்றி இது சாத்தியமே இல்லை.

– S. மோகன்

# உருகும் பனிமலைகள் கொதிக்கும் பெருங்கடல்கள்

உலக வெப்பமயமாதல் பற்றியும், பருவநிலை மாறுதல்கள் பற்றியும் சர்வதேச அளவில் கூடிக் கூடிப் பேசிக்கொண்டே இருக்கிறோம். சுற்றுச்சூழல் மீதான விழிப்புணர்வு மட்டுமல்ல, பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் உடனடித் தேவை. கரிப்புகை வெளியீட்டையும் பசுமைக் குடில் வாயுக்களின் வெளியேற்றத்தையும் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். அனைத்து நாடுகளும் ஒன்றுசேர்ந்து அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டால், பெருங்கடல்களின் நீர்மட்டம் 2100-க்குள் மேலும் 40 செமீ உயரும். இவ்விஷயத்தில் அலட்சியம் காட்டினால் 80 செமீ வரை நீர்மட்டம் அதிகரிக்கும். 1900-களிலிருந்து கடல் நீர்மட்டம் சராசரியாக16 செமீ உயர்ந்துள்ளது. பனி உறைந்து காணப்படும் கிரீன்லாந்து, அன்டார்டிகா பகுதிகளில் பனி அதிகமாக உருகத் தொடங்கிவிட்டதால் கடல் நீர்மட்டம் ஆண்டுதோறும் 1.8 மிமீ உயர்ந்துவருகிறது. இப்போது பனி உருகும் வேகமும், கடல் நீர்மட்டம் உயரும் அளவும் வேகம் பெற்றுள்ளது.

பருவநிலை மாறுதல்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் என்பவை அச்சுறுத்தும் எச்சரிக்கைகள் அல்ல; கண் முன் நிகழ்ந்துகொண்டிருக்கும் நடைமுறை உண்மைகள். பெருங்கடல்கள், துருவப் பகுதிகளின் பனிமண்டலங்கள், மிக உயர்ந்த மலையின் பனிபடர்ந்த போர்வைகள் போன்றவை புவி வெப்பமடைவதால் உருவாகும் வெப்பத்தின் விளைவுகளால் பாதிப்படையத் தொடங்கிவிட்டன. அனைத்துப் பெருங்கடல்களும் சூடேறிவருகின்றன, புவியின் பனிப் பாறைகள் நொறுங்கிவருகின்றன. பருவநிலை மாறுதல் பற்றி ஆராய ஐக்கிய நாடுகள் சபை அமைத்த அரசுகளுக்கு இடையிலான குழு (ஐபிசிசி) உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் உதவியுடன் பருவநிலைத் தரவுகளைத் திரட்டி, தொடர்ந்து ஆராய்ந்துவருகிறது. 1990 தொடங்கி இதுவரை 5 ஒட்டுமொத்தமான அறிக்கைகளைத் தயாரித்தது. இப்போது ஆறாவது அறிக்கையைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு 3 விஷயங்கள் குறித்து அறிக்கைகளைத் தயாரித்தது ஐபிசிசி. முதலாவது அறிக்கை, புவியின் வெப்பநிலை இப்போது இருப்பதைவிட 1.5 டிகிரி செல்சியஸ் உயர்ந்ததை எச்சரித்ததோடு, பேரழிவுகள் ஏற்படும் என்றும் எச்சரித்தது. இரண்டாவது அறிக்கை, நிலங்கள் மீதும் வனங்கள் மீதும் புவி வெப்ப அதிகரிப்பு ஏற்படுத்திய பாதகங்களையும், ஏற்படுத்தவிருக்கும் சேதங்களையும் விவரித்தது. இப்போது வெளியாகியிருக்கும் மூன்றாவது அறிக்கை, பெருங்கடல்களும் பனிப் போர்வைகள், பனி முகடுகளும் எப்படி இதைத் தாங்குகின்றன என்பதை விவரித்தது. இந்த அறிக்கைகள் அனைத்துமே எதிர்காலத்தில் புவி கடுமையான சோதனைகளைத் தாங்க வேண்டியிருக்கும் என்பதையே உணர்த்துகின்றன. காரணம், புவி வெப்பநிலையை 2 டிகிரியோ, 1.5 டிகிரியோ குறைப்பது அப்படியொன்றும் சுலபமான செயல் அல்ல. 2050-க்குள் எல்லா நாடுகளும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை முழுதாக இல்லாமல் செய்தால்தான் 1.5 டிகிரி அளவுக்குக் குறைக்க முடியும். ஆனால், சமீபத்திய ஆய்வுகளோ புவி மேலும் 3.5 டிகிரி வெப்ப அதிகரிப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்று எச்சரிக்கின்றன.



உலக நாடுகளின் தலைவர்கள் பருவநிலை மாறுதல் தொடர்பாக ஆலோசனை நடத்த 2015-ல் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கூடினார்கள். தொழில் புரட்சி தொடங்குவதற்கு முன்னால் இருந்த புவி வெப்பநிலையை மீண்டும் ஏற்படுத்தினால் மட்டுமே உலகைக் காப்பாற்ற முடியும் என்று ஒப்புக்கொண்டார்கள். சராசரியாக ஆண்டுக்கு 2 டிகிரி செல்சியஸ் வெப்பத்தைக் குறைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். குறைந்தபட்சம் 1.5 டிகிரி செல்சியஸாவது குறைக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள். 2 டிகிரி செல்சியஸ் குறைக்க வேண்டும் என்றாலே, அனல் மின் நிலையங்கள் உட்பட பல்வேறு தொழில் உற்பத்தியைக் குறைத்தாக வேண்டும். அது அந்தந்த நாடுகளின் பொருளாதார உற்பத்தியைக் கணிசமாகக் குறைத்துவிடும். அப்பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வுகளைக் கண்டாக வேண்டும். இருந்தாலும், மக்களிடம் விளக்கி அவர்களுடைய ஒத்துழைப்புடன் புவி வெப்பத்தைக் குறைத்தால்தான் உலகுக்கு நேரவிருக்கும் கடுமையான விளைவுகளைத் தடுக்க முடியும் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால், இதற்கிடையில் வெப்பம் சராசரியை விட ஒரு டிகிரி செல்சியஸ் அதிகரித்துவிட்டது. ஆர்க்டிக் போன்ற துருவப் பகுதிகளில் 4 டிகிரி வரையிலும்கூட அதிகரித்திருக்கிறது. பனிப் பிரதேசங்களும் பெருங்கடல்களும் பருவநிலை மாறுதலால் பாதிக்கப்பட்டு, தோற்ற மாறுதல்களை அடைந்துவருகின்றன.

துருவப் பகுதிகளிலும் உயரமான மலைகளிலும் உள்ள பனிப்பாறைகள் உருகி நீராகப் பெருகுகின்றன. வெப்பமண்டல நாடுகளில் கடலில் பலத்த புயல்கள் உருவாகின்றன. கடல் சூடாகிக் கொதிக்கும்போது வளிமண்டலத்தில் ஈரப்பதம் அதிகரித்து வலுவான சூறாவளிகள் தோன்றி பெருமழையாகப் பெய்கிறது. மனிதர்களால் உணரப்படாத பல மாற்றங்களும் கடல்பரப்பில் ஏற்படுகின்றன. கடலின் மேற்பரப்பு நீர் கொதி நீரானதும் அதன் அடர்த்தி குறைகிறது. அது கடலின் கீழ்மட்டத்தில் உள்ள உயிர்ச் சத்துகள் நிறைந்த குளிர் நீருடன் கலக்காமல் பிரிகிறது. எனவே, மேற்பரப்பு நீர் அப்படியே தேக்கமடைகிறது. அதில் ஆக்சிஜன் குறைவாக இருப்பதால் கடல்வாழ் உயிரினங்களும் தாவரங்களும் உயிர்வாழ முடியாமல் தவிக்கின்றன. உலகின் பவளப் பாறைகளில் 30% நெருக்கடியில் சிக்கிவிட்டன. எஞ்சியவற்றில் 60% அழியும் நிலைக்குச் சென்றுவிட்டன. 2100-க்குள் கடலடி பவளப் பாறைகளில் 70% முதல் 90% வரையில் அழிந்துவிடும். புவி வெப்பமடைவது 2 டிகிரி செல்சியஸ் அதிகரித்தால் இவற்றின் அழிவு 99% வரை உயர்ந்துவிடும்.

இந்தப் பவளப் பாறைகளின் அடியில்தான் சிறு மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகள் இனப்பெருக்கம் செய்கின்றன. அவற்றையே



உண்கின்றன. இந்தப் பவளப் பாறைகள் கடலில் உள்ள உயிரினங்களை மட்டுமல்ல; கடலோரம் வசிக்கும் மக்களையும் புயல், சூறாவளி காலங்களில் கடல் அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி கரையில் அதிக சேதம் ஏற்படாமலும் காக்கின்றன. கடலில் பவளப் பாறைகளில் பிறக்கும் மீன்கள் மனிதர்களுக்கு உணவாகின்றன. கடலின் மீன்பாடு பவளப் பாறைகள் இல்லாவிட்டால் வற்றிவிடும். இந்நிலை நீடித்தால், இந்நூற்றாண்டின் இறுதியில் கடலிலிருந்து கிடைக்கும் மீன்பாடு அளவு மேலும் 20% குறைந்துவிடும். இப்போது டூனா போன்ற மீன்கள் கடல்பரப்பில் கிடைப்பது அரிதாகிக் கொண்டிருக்கிறது. கடலில் இருக்கும் மீன்களை ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்கள் உதவியுடன் பெரிய வலைகளைக் கொண்டு பிடிப்பது அதிகரிப்பதால், கடலில் மீன்களின் இருப்பு வேகமாகக் குறைந்துகொண்டிருக்கிறது. கடல் சூடேறுவது அவற்றை மேலும் வற்றவே செய்யும்.

1970-கள் முதலே பசுங்குடில் வாயு வெளியேற்றங்களின் 90% அளவைப் பெருங் கடல்கள்தான் தாங்கிவருகின்றன. பருவநிலை மாறுதலின் தீய விளைவுகள் நிலப்பகுதிகளில் வாழ்வோரைப் பாதித்துவிடாமல், பெருங் கடல்களும் பனிப் பிரதேசங்களும் காத்துவருகின்றன. இவை இரண்டும் இல்லாவிட்டால் புவியின் சராசரி வெப்பநிலை இப்போது உள்ளதைவிட மேலும் 1 டிகிரி செல்சியஸ் கூடியிருக்கும். "ஐபிசி-சியின் அறிக்கையானது உலக நாடுகள் அனைத்தும் உரிய நேரத்தில், ஒருங்கிணைந்து, நீண்டகாலத் தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்று வலியுறுத்துகிறது. உலகின் சுற்றுச்சூழல், வன உயிரினங்கள், நம்முடைய குழந்தைகளுக்கு நாம் விட்டுச் செல்லக்கூடிய இந்த உலகம் ஆகியவற்றின் நிலைமை மேம்படுவதற்காகவே இதைச் செய்தாக வேண்டும்" என்கிறார் ஐபிசிசி அமைப்பின் துணைத் தலைவர் கோ பேரட். வெப்பநிலையைக் குறைக்க உலக நாடுகள் அனைத்தும் ஒரே சமயத்தில் தீவிரமாக நடவடிக்கை எடுத்தால்தான் விளைவுகளைத் தடுக்க முடியும். பேரழிவுகளைக் குறைக்க முடியும்.

**- V. சுப்ரமணியன்**



# பருவ நிலை மாற்றங்கள்

# டெங்கு பீதி !

பள்ளி மாணவர்களை உள்ளடக்கிய வாட்ஸ் - அப் குழுக்களை சம்பந்தப்பட்ட வகுப்பு ஆசிரியர்கள் மூலம் உருவாக்கி, அதன் வாயிலாக டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முயற்சியை சுகாதாரத் துறை தொடங்கியுள்ளது. அதன்படி, மாணவர்கள், தங்களது பகுதிகளில் டெங்கு கொசுக்கள் உற்பத்தியாக வாய்ப்புள்ள இடங்களின் புகைப்படங்களையும், தகவல்களையும் சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு அனுப்பலாம் என்றும், அவை சுகாதாரத் துறையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஏடிஸ் - எஜிப்டை' வகை கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சலுக்கு நாடு முழுவதும் இதுவரை 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் கடந்த 8 மாதங்களில் மட்டும் மாநிலத்தில் 4 ஆயிரத்துக்கும் அதிகமானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளில் மட்டும் 500-க்கும் அதிகமானோருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாக சுகாதாரத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், அதனைத் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக பள்ளிகளில் விழிப்புணர்வ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த வகையில் அசோக் நகர் பெண்கள் மேனிலைப் பள்ளியில் நிலவேம்பு குடிநீர் வழங்கும் முகாமும், விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடைபெற்றது. அதில், ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனையின் நிர்வாக அதிகாரி



டாக்டர் ஆனந்தகுமார், மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவப் படிப்பு மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அப்போது பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்திய அவர்கள், ஏறத்தாழ 400 மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீரை விநியோகித்தனர். இதுதொடர்பாக டாக்டர் ஆனந்தகுமார் கூறியதாவது: டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு ஆக்கப்பூர்வமாக மேற்கொண்டு வருகிறது. அதற்கு முழு ஒத்துழைப்பை நாங்கள் அளித்து வருகிறோம். பள்ளிகளில் வகுப்புவாரியாக மாணவர்களை உள்ளடக்கிய வாட்ஸ் - அப் குழுக்களை உருவாக்குமாறும், டெங்கு கொசுக்கள் உற்பத்தியாகும் பகுதிகளைக் கண்டால் அதுகுறித்த விவரங்களை குழுவில் மாணவர்களைப் பதிவிடச் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்தத் தகவல்களை சுகாதாரத் துறையின் கவனத்துக்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கொண்டுவரும்பட்சத்தில் உடனடியாக அதன்பேரில் நடவடிக்கை எடுக்க முடியும். டெங்குவை ஒழிக்க அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம் என்றார் அவர். **- ராஜேந்திரன்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446

# எதார்த்ததின் வெளிப்பாடு

ஒருபக்க சிறுகதை

விழா ஒன்றில் இளைஞர் ஒருவர் தன்னுடைய பழைய ஆசிரியரை சந்திக்கின்றார். அப்போது அந்த முன்னாள் மாணவ இளைஞர் "தன்னை தெரிகின்றதா?" என்று அந்த ஆசிரியரிடம் கேட்கின்றார். ஆசிரியரோ "எனக்கு நினைவில் இல்லை எனவே நீங்களே யார் என்று அறிமுகம் செய்து கொள்ளுங்களேன்" என்றார்.

இளைஞர் கூறினார், "நான் உங்கள் முன்னாள் மாணவன்" என்றார். அதற்கு அந்த ஆசிரியர் "மிக்க மகிழ்ச்சி, எங்கு உள்ளீர்கள், வாழ்க்கை எப்படி உள்ளது, என்ன செய்கிறீர்கள்" எனக் கேட்டார். இளைஞர், "நான் ஆசிரியராக உள்ளேன்". என்றார். "அவ்வாறு ஆசிரியர் ஆக வேண்டும் என்று எது உங்களைத் தூண்டியது" என வினவினார் அந்த ஆசிரியர். "உங்களால் தான் தூண்டப்பட்டேன். உங்களைப் பார்த்துத் தான் நானும் ஆசிரியனாக வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியது" என்றார். மேலும் "உங்களுடைய செயல்களின் தாக்கத்தினால் தான் நானும் கற்றுக் கொடுக்கும் தொழிலில் உள்ளேன்" என்றார். "எப்படி என்ன தாக்கம் உங்களிடததிலே உண்டாக்கினேன்" எனக் கேட்டார் ஆசிரியர்.

"நான் உங்களுக்கு ஒரு கதை கூறட்டுமா?" என்று கூறி சொல்ல ஆரம்பித்தார் அந்த இளைஞர். "ஒரு நாள் என்னுடைய வகுப்புத் தோழர் மிகவும் விலையுயர்ந்த கடிகாரத்தை அணிந்து வந்தார். அப்படிப்பட்ட ஒரு கைக்கடிகாரம் வாங்குவது என்னுடைய சக்திக்கு அப்பாற்ப்பட்டது. எனவே அதனை திருட நினைத்து அவர் கடிகாரத்தை பாக்கெட்டில் வைத்திருந்த போது எடுத்து விட்டேன். அவர் வகுப்பறைக்குள் வந்தவுடன் தன்னுடைய கடிகாரம் காணவில்லை என்று ஆசிரியரிடம் புகார் செய்தார். ஆசிரியர் அவர்களும் இவருடைய கடிகாரத்தை எவர் எடுத்து இருந்தாலும் அதனை திரும்பக் கொடுத்து விடுங்கள் என அறிவித்தார். நான் எப்படி கடிகாரத்தை திருப்பித் தருவேன் என நினைத்து எனக்கு மிகவும் சங்கடமாக போய்விட்டது.

ஆசிரியர் வகுப்பறையின் கதவை மூடச் செய்தார். எல்லோரையும் எழுந்து வரிசையாக நிற்கச்சொன்னார். எனக்கு மிகவும் அவமானமாக போய்விட்டது. அவர் கூறினார், மாணவர்களே வரிசையாக நில்லுங்கள், ஆனால் எல்லோரும் கண்ணை மூடிக் கொண்டு தான் நிற்க வேண்டும் என்றார். அவர் ஒவ்வொருவரின் பாக்கெட்டு களிலும் கையை விட்டு பார்த்துக் கொண்டே சென்றார். என்னுடைய பாக்கெட்டுக்குள்ளும் கையை விட்டார் கடிகாரத்தையும் எடுத்துக் கொண்டார். ஆனால் எல்லோரும் கண்களை மூடி இருந்ததால் எவரும் எதையும் பார்க்க இயலவில்லை.

பின்னர் அந்த கடிகாரத்தை உரியவரிடம் கொடுத்து விட்டார். ஆனால் இது பற்றி ஒரு வார்த்தை கூட என்னிடம் கேட்கவில்லை. வேறு எவரிடமும் இது பற்றி கூறவோ, சம்பவத்தை விவரிக்கவோ இல்லை. அந்நாளிலே நீங்கள் என்னுடைய மானத்தை காபாற்றினீர்கள் என்னை திருடன், மோசடிக்காரன், என்றெல்லாம் திட்டாமல் ஒன்றுமே பேசாமல் இருந்தீர்கள் என்னுடைய கவுரத்தையும், மானத்தையும் காபாற்றினீர்கள். என்னிடமும் எதுவும் கூறவில்லை. அது மட்டு மின்றி கடிகாரத்தின் உரிமையாளரிடமும் இது பற்றி எதுவும் கூறவில்லை. இது எனக்கு ஒரு செய்தியை கற்றுத் தந்தது. அது ஆசிரியர் என்பவர் இப்படி தான். கற்பித்தல் என்பது எவ்வளவு அற்புதம். இதைத் தான் என் வாழ்க்கையிலும் மேற்கொள்ள வேண்டும் என்றும், கற்பித்தலை செய்ய வேண்டும் என விரும்பினேன்" இதனைக் கேட்ட அந்த ஆசிரியர் "அற்புதம்" என்றார்.

மீண்டும் அந்த இளைஞர் கேட்டார், "இப்பொழுதாவது என்னை தெரிகின்றதா" எனக் கேட்டார். அதற்கு மீண்டும் "எனக்கு எதுவும் நினைவில் இல்லை, யார் என்பதும் தெரியவில்லை"? என்றார். "ஏன் தெரியவில்லை "என்று கேட்டார் அந்த இளைஞர். ஆசிரியர் கூறினார், "நானும் அந்த சமயத்தில் கண்ணை மூடிக் கொண்டிருந்தேன்" என்றார்.

- **ஆசிரியர்**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : **S.ALI MOHAMMAD SYEED**, at **J.M.PROCESS**, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: **A.MOURIYAN.**

national health authority




# BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR

## World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.


For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.

- Benefits to over **10 crore** poor and vulnerable families and more than **50 crore** beneficiaries across the country
- Annual healthcare benefits of up to **Rs. 5 Lakh** for every entitled family
- Access to healthcare services in all government and empanelled private hospitals

Toll-Free helpline number
**14555/1800111565**

www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Regd. No.: **TN/CC(S)DN/461/19-21**
Registered with Registrar of Newspaper for India Under **No.: TNTAM44870/2012**
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




Also visit our MAKKAL VISARANAI website http://makkalvisaranai.com/ and enjoy reading more

Scan now to download the eBook (PDF)

Scan now to download the App